மலர்-4 இதழ்-75 அக்டோபர் 1-15 2019 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

## மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்




# உடல்நலன் மற்றும் ஆரோக்கியம் தரும்

# தமிழ்மொழி உச்சரிப்பு



# அட்சதையின் மகத்துவம்

பொதுவாக எந்த சுப நிகழ்ச்சியாக இருந்தாலும் அட்சதை இன்றி நடைபெறுவது கிடையாது. அட்சதை லட்சுமிகடாட்சம் நிறைந்த பொருளாகவே ஆன்மிகத்தில் போற்றப்படுகிறது.

முனை முறியாத அரிசி தான் அட்சதை, நல்ல மங்களங்களை நல்குவது மஞ்சள். இந்த இரண்டையும் இணைப்பது பசு நெய், இது கோமாதாவின் திரவியம்.

பூமிக்கு மேல் விளையும் பொருள் அரிசி, பூமிக்கு கீழ் விளையும் பொருள் மஞ்சள், இந்த இரண்டையும் இணைக்க தூய பசு நெய் தேவை.

அரிசியும் மஞ்சளுமான மணமக்களை இணைக்கும் பசு நெய்யாகப் பாசமிகு உற்றார் உறவினர்கள் உள்ளனர் இதுவே தத்துவம்.

ஆகவே உற்றார் உறவினர்கள், பெரியோர், நண்பர்கள் என அனைவரும் மணமக்களை வாழ்த்தும் பொழுது, மணமேடைக்கு வந்து ஒருவர் பின் ஒருவராக மணமக்களை அட்சதை தூவி ஆசி வழங்குவதே சரியான முறை.

சந்திரன் சக்தி அதிகம் அமைந்த அரிசியும், குருபகவானின் சக்தி அதிகம் அமைந்த மஞ்சளும், மஹா லட்சுமி பரிபூரண சக்தி கொண்ட நெய்யினை கலந்து, உற்றார் உறவினர்கள், பெரியோர், நண்பர்கள் என அனைவரும் அவர்களை ஆசி வழங்கும் பொழுது, அவர்களின் வாழ்வு சிறப்பாக அமையும் என்பது, சாஸ்திர உண்மை.

திருமணம், தொழில்கள் மற்றும் சுபகாரியங்கள் அனைத்திலும், மஞ்சள் அட்சதை மூலம் பெரியோர்கள் ஆசிர்வதித்தால், அதனால், வெற்றி பெருகும். மஹாலட்சுமி கடாட்சம் கிடைக்கும்.

வயதில் மூத்தவர்கள் வீடுகளுக்கு சென்று திரும்பும் போது அவர்கள் கையால் அட்சதையால் ஆசி பெற்று வருவது மிகுந்த பலனைத் தரும்.

# சஞ்சலம் போக்கும் முருகன்

மலைகளில் சிறந்தது திருத்தணிகை என்று போற்றுகிறது கந்த புராணம். திருத்தணிகை மலைக்குச் செல்ல வேண்டும் என்று நினைத்தாலோ... தணிகை மலை இருக்கும் திசை நோக்கித் தொழுதாலோ... தணிகையை நோக்கி பத்தடி தூரம் சென்றாலோ... நோய்நொடிகள் நீங்கும் என்கிறது தணிகை புராணம்.



தேவர்களது துயர் தீர்க்கும் பொருட்டு சூரபதுமனுடன் செய்த பெரும் போரும், வள்ளியம்மையை கரம் பிடிக்க வேடர்களுடன் செய்த சிறு போரும் முடிந்து முருகப்பெருமான் சீற்றம் தணிந்து அமர்ந்த தலம் ஆதலால், இது தணிகை எனும் பெயர் பெற்றது.

தேவர்களது அச்சம் தணிந்த தலம்; அடியவர்களது துன்பம், கவலை, பிணி மற்றும் வறுமை ஆகியவற்றை தணிக்கும் தலம் ஆதலால் தணிகை எனும் பெயர் பெற்றதாகவும் கூறுவர். மனத்துயர் சஞ்சலம் உள்ளவர்கள் திருத்தணிகை முருகனை வழிபட்டால் நற்பலன் கிடைக்கும்.





# மகாலட்சுமி வாசம் செய்யும் வாசல் படி



வீட்டு தலைவாசலை எப்போதும் சுத்தமாக வைத்துக்கொள்ளுங்கள், தலைவாசலில் மஞ்சள், குங்குமம் வாரம்தோறும் மாற்றுங்கள், தலைவாசலுக்கு எதிரில் குப்பை, காலணிகள் இருந்தால் அகற்றுங்கள், தலைவாசலுக்கு எதிரில் துளசி, கற்பூரவள்ளி, இடவசதி இருந்தால் பவள மல்லி போன்ற செடிகளை வளர்ப்பது சிறப்பாகும்.

மகாலட்சுமி வாசம் செய்யும் தலைவாசல் எப்போதும் மங்களகரமாக இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள். தினமும் காலை, மாலை வேளைகளில் வாசக்காலில் விளக்கேற்றுவதை வழக்கமாகக் கொள்ளுங்கள்.

வாசலுக்கு நேராக அமர்ந்து அமங்களகரமான வார்த்தைகளை பேசுவதை தவிருங்கள். வாசலுக்கு இடையில் நின்று கொண்டு பொருட்களை கொடுப்பது, வாங்குவதை தவிருங்கள், வாசலில் விளக்கேற்றிய பின் பூஜையறையில் விளக்கேற்றுவதை வழக்கமாக கொள்ளுங்கள்.

# பூச்சாண்டியாக பயமுறுத்தும் பெருமாள்

ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் கோவிலில் ஆண்டு தோறும் ஆவணி – புரட்டாசி மாதத்தில் பவித்ர உற்சவம் எனப்படும் நூலிழை திருநாள் 9 நாட்கள் மிகச்சிறப்பாக நடைபெறும்.





யாகசாலையில் நம்பெருமாள் எழுந்தருளியிருக்க அவரைச்சுற்றிலும் பூக்கள் பரப்பி வைக்கப்பட்டு சிறப்பு வழிபாடு நடைபெறும். இதனால் இந்நிகழ்ச்சி பூப்பரத்திய ஏகாதசி என்றும் அழைக்கப்படுகிறது.

அத்துடன் கோவிலின் அனைத்து சன்னதிகளிலும் மூலவர், உற்சவர் உள்பட சிறிய, பெரிய மூர்த்திகள் அனைவருக்கும் நூழிலைகள் கொண்டு அலங்காரம் செய்யப்பட்டிருக்கும். எனவே இதற்கு நூலிலைத் திருவிழா என்ற சிறப்புப் பெயரும் உண்டு. இவ்விழாவே ஸ்ரீரங்கத்தில் திருப்பவித்ர உற்சவம் என்ற பெயரில் நடைபெற்று வருகிறது.

பவித்ர உற்சவத்தை முன்னிட்டு உற்சவர் நம் பெருமாள் தினமும் மாலையில் மூலஸ்தானத்தில் இருந்து புறப்பட்டு தங்கக் கொடிமரத்திற்கு அருகில் உள்ள பவித்ரோத்சவ மண்டபத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு சேவை சாதிப்பார்.

பூச்சாண்டி சேவையின் போது மூலவர் ரெங்கநாதரின் திருமுக மண்டலம் உள்பட திருமேனி முழுவதும் நூலிழைகளை சுருள், (படத்தை பார்க்கவும்) சுருளாக வைத்து அலங்கரித்திருப்பார்கள். இந்த காட்சி பார்வைக்கு அச்சமூட்டுவதுபோல் இருக்கும். எனவே இதை பூச்சாண்டி சேவை என்று குறிப்பிடும் பழக்கம் ஏற்பட்டது.

# சோமாவார விரதப் பலன்

## சிதைந்த நட்பைக் கூட இணைத்து வைக்கும்



சோமாவார விரதத்தின் பலன்களை புராணங்கள் பல சொல்லியுள்ளது. இதில் குறிப்பாக அகத்தியரே சோமாவார விரதத்தைத்தின் பெருமையை பற்றி கூறியுள்ளதை பார்ப்போம்.

சேர, சோழ, பாண்டியநாடுகளில் திடீரென மழை பொய்த்தது. நாடெங்கும் பஞ்சம் தலை விரித்தாடியது. மக்கள் பட்ட துன்பத்திற்கு அளவில்லை. அரண்மனை களஞ்சியத்தில் சேமித்து வைக்கப்பட்டிருந்த பொருட்களும் மக்களுக்கு வாரி வழங்கப்பட்டு காலியாகிக் கொண்டிருந்தது.

சண்டையும், சச்சரவும், செல்வம் இருக்கும் போது மட்டும் தான்!

பசி வந்துவிட்டால் ஒற்றுமை வந்துவிடும்!

இதை நிருபிக்கும் வகையில், தங்களுக்குள் யார் பெரியவர் என அடிக்கடி போரிட்டுக் கொள்ளும் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் மதுரையில் ஒன்று கூடி பஞ்சம் போக்கும் முறை பற்றி ஆய்வு செய்தனர்.

இதற்குரிய தீர்வை பொதிகைமலையில் தங்கியிருக்கும் அகத்தியரைச் சந்தித்து கேட்பதென முடிவு செய்தனர். அனைவரும் சோமசுந்தரப் பெருமானையும், மீனாட்சியையும் வணங்கி, அகத்தியரைத் தரிசித்த பிறகாவது மழை பெய்து, தமிழகம் செழிக்க வேண்டும் என வேண்டிக் கொண்டனர். பின்னர் முப்பெரும் மன்னர்களும் பொதிகை மலைக்குச் சென்றனர்.

அகத்தியர் தனது மனைவி லோபமுத்திரை யுடன் ஆஸ்ரமத்தில் தங்கியிருந்தார். அந்த தம்பதியினரை அவர்கள் வணங்கினர். மூவரை யும் வரவேற்று ஆசியளித்த அகத்தியர், அவர்கள் வந்த விபரத்தைக் கேட்டு மனவருத்தம் கொண் டார்.

மாமன்னர்களே! உங்களுடைய கிரக சஞ்சாரப்படி இன்னும் 12 ஆண்டுகளுக்கு நாட்டில் மழை பெய்ய வழியில்லை. இதற்கு ஒரே பரிகாரம் தேவலோகத் தலைவன் இந்திரனை நீங்கள் பிரார்த்திப்பது தான்.

அவனைப் பார்ப்பதற்குரிய ஏற்பாடுகளை நீங்கள் செய்து கொள்ளுங்கள். அவனது அருள் கிடைத்தால் வருணனை அனுப்பி மழை பொழிய வைப்பான், என்றார்.

சேர, சோழருக்கு இந்த யோசனையில் உடன்பாடு இருந்தாலும், இந்திரனுக்கும், தனக்கும் ஏற்கனவே பகைமை இருந்ததால், உக்கிரபாண்டியனுக்கு இதில் உடன்பாடில்லை.

மாமுனிவரே! இந்திரன் என்னைத் தவ றாகப் புரிந்து கொண்டிருப்பவன். நான் என் நாட்டு மக்களின் நலன் கருதி யாகங்கள் பல செய்தேன். ஆனால், இந்திரலோகப் பதவியைப் பிடிப்பதற்காக நான் அவ்வாறு செய்வதாக எண்ணிய இந்திரன், வருணன் மூலமாக ஏழு கடல்களையும் மதுரை மீது ஏவிவிட்டான். நான் அவற்றை என் தந்தை சோமசுந்தரர் கொடுத்த வேல் வீசி தடுத்து நிறுத்தினேன். இதனால், அவன் என் மீது ஆத்திரமாக உள்ளான். என்னைப் பகையாளியாகக் கருதும் அவன், சேர, சோழருக்கு வேண்டுமானால் உதவுவான். எனக்கு உதவி மறுப்பானே!

எனவே, நான் அவனைப் பார்க்க விரும்ப வில்லை. வேறு உபாயம் இருந்தால் சொல்லுங்கள், என பணிவுடன் விண்ணப்பித்தான். அகத்தியர் சிரித்தார். உக்கிரபாண்டியா! பகைவர்களையும் நண்பர்களாக மாற்றிக்கொள்ளும் பக்குவம் நமக்கு வேண்டும். அதற்கு விரதங்களும் உதவும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு பொறுமை வேண்டும். அவர்கள் மக்கள் நலன் கருதி, அனைவரையும் அனுசரித்து செல்ல வேண்டும்.

நீ இந்திரனிடம் **நட்பு கொள்ள வேண்டுமானால், சோமவார விரதம் அனுஷ்டிக்க வேண்டும்.** அந்த விரதம் பற்றி சொல்கிறேன், கேள்! என்று அறிவுரை கூறினார்.

மன்னர்களே...!

- சோமவார விரதத்தை கார்த்திகை மாத திங்கள் கிழமைகளில் துவங்க வேண்டும்.
- மற்ற மாதங்களாக இருந்தால், வளர் பிறை திங்கள் கிழமையை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.
- அமாவாசையும், திங்கள் கிழமையும் இணைந்து வரும் நாளாக இருக்குமானால் சிறப்பானது.
- முதல் நாள் சூரியவாரத்தன்று (ஞாயிறு) இரவு முதல் திங்கள்கிழமை இரவு வரை உபவாசம் (பட்டினி) இருப்பது நல்லது.
- அன்று சிவத்தலங்களுக்குச் சென்று வரவேண்டும்.

❖ குறிப்பாக, மதுரை மாநகரில் இந்த விரதத்தை அனுஷ்டிப்பவர்கள் கோடிமடங்கு அதிக பலன் பெறுவர்.

❖ இந்த விரதத்தால் பகைமை நீங்கும்.

❖ இறைவனிடம் வைத்த வேண்டுகோள் நிறைவேறும்.

என்று அருளினார்.

அவர்கள் அந்த விரதத்தை அனுஷ்டிப்பதாக அகத்தியரிடம் உறுதியளித்து விட்டு நாடு திரும்பினர். சோமவார விரதத்தையும் அனுஷ்டித்தனர். சோமவார விரதத்தின் பலனாக இந்திரன் மூவேந்தர்களையும் தேவலோகத்துக்கு வர அழைப்பு விடுத்து புஷ்பக விமானத்தை அனுப்பினான். அவர்கள் தேவலோகம் சென்றனர். இந்திரன் அவர்களை வரவேற்று ஆசனம் அளித்தான். சேர, சோழ மன்னர்கள் அந்த ஆசனங்களில் அமர்ந்தனர்.

உக்கிரபாண்டியன் அதில் அமர மறுத்து விட்டான். இந்திரன் உயர்ந்த பீடத்தில் இருந்த சிம்மாசனத்தில் அமர்ந்து கொண்டு, அவனுக்கு கீழே இருக்கும் வகையில் ஆசனம் அமைத்திருந்தது அவனுக்கு பிடிக்கவில்லை. அவன் வேகமாக பீடத்தில் ஏறினான். இந்திரனுக்கு சமமாக அருகில் இருந்த இருக்கையிலேயே அமர்ந்து கொண்டான்.

இந்திரனுக்கு தர்மசங்கடமாக இருந்தது. இருக்கையில் இருப்பவனை எழச்சொன்னால், சிறிய விஷயத்தை பெரிதுபடுத்தியது போலவும், தன்னை அற்பனாக பிறர் கருதி விடக்கூடும் என்பதாலும், பொங்கி வந்த கோபத்தை அடக்கிக் கொண்டு, அதைக் கண்டு கொள்ளாதது போல் நடித்து, அவர்கள் வந்த விஷயத்தைச் சொல்லும் படி கேட்டான்.

சேர, சோழர்கள் தாங்கள் வந்த விபரத்தைக் கூறினர். இந்திரன் அவர்களிடம், என்னை நம்பி வந்த உங்களுக்கு, நீங்கள் கேட்டது போல மழை பெய்ய ஏற்பாடு செய்கிறேன்.

ஆனால், இங்கே உக்கிரமாக வந்திருக்கும் உக்கிரபாண்டியருக்கு அதையும் விட சிறந்த பரிசளிக்க எண்ணுகிறேன், என்று சொல்லி, யாரங்கே! அந்த முத்துமாலையை எடுத்து வாருங்கள், என்றான்.

காவலர்கள் பத்து பேர் சேர்ந்து ஒரு தட்டில் வைக்கப்பட்டிருந்த முத்து மாலையை மிகவும் சிரமப்பட்டு தூக்கி வந்தனர். அந்த மாலையை அணிந்து கொண்டால், தலையே தொங்கிவிடும். அவ்வளவு கனம். அதை உக்கிரபாண்டியன் முன்னால் வைத் தார்கள். பாண்டியா! அதை எடுத்து அணிந்து கொள், என்றான் இந்திரன்.

இந்திரன் இந்த பரீட்சையை உக்கிரபாண்டியனுக்கு வைப்பதன் மூலம், அவனை அவமானப்படுத்த எண்ணினான். ஏனெனில், அந்த முத்து மாலையை தனிநபரால் தூக்கவே முடியாது. அவ்வாறு தூக்க முடியாமல் உக்கிரபாண்டியன் அவமானப்பட்டு நிற்கும்போது, கைகொட்டி சிரிக்கலாம் என்பது அவனது நினைப்பு!

ஆனால், நடந்ததோ வேறு.

அந்த மாலையை ஏவலர்கள் இறக்கி வைத்ததும், தன் இடது கையால் லாவகமாக எடுத்த உக்கிரபாண்டியன் கழுத்தில் அணிந்து கொண்டு அட்டகாசமாக நின்றான். இந்திரனும், தேவர்களும் அவனது பலம் கண்டு நடுங்கிவிட்டனர். உக்கிர பாண்டியா! உன் பலம் பாராட்டத் தக்கது. யாராலும் தூக்க இயலாத இந்த மாலையை ஒற்றைக்கையால் எடுத்து அணிந்து கொண்டாய்.



இனி உன்னை இந்த உலகம் ஆரம் சூழ்ந்த பாண்டியன் என சிறப்பித்து அழைக்கும், என்றான். இந்திரனின் இந்த பாராட்டை உக்கிரபாண்டியன் ஒரு பொருட்டாகவே கருதவில்லை.

முப்பெரும் மன்னர்களும் இந்திரலோகத்தில் இருந்து புறப்பட்டு நாடு போய் சேர்ந்தனர். சேர, சோழ நாடுகளில் மழை கொட்டியது.

பாண்டிய நாட்டில் மட்டும் இந்திரனின் ஆணவத்தாலும், சதியாலும் மழை பெய்யவில்லை. இந்திரனை அடக்கி மழையைக் கொண்டு வருவதற் கான கடும் ஆலோசனையில் உக்கிர பாண்டியன் இருந்தான். அவனும், காந்திமதியும் சோமவார விரதத்தை தொடர்ந்து அனுஷ்டித்தனர். சோம சுந்தரப் பெருமானை மட்டுமே அவர்கள் நம்பினர். அந்த வழிபாட்டுக்கு ஒருநாள் பலன் கிடைத்தது. உக்கிரபாண்டியன் பொதிகைமலை சாரலில் வேட்டையாடிக் கொண்டிருந்த போது, காளமுகி, துரோணம், புஷ்கலாவருத்தம், சங்காரித்தம் எனப்படும் நான்கு வகை மேகங்களின் அதிபதிகள் அந்த வனத்தில் உலவுவதைக் கண்டான்.

அவர்கள் இந்திரனின் கட்டளைக் கேற்ப பல திசைகளுக்கும் சென்று மழை பெய்விப்பவர்கள். அவர்களை உக்கிரபாண்டியன் விரட்டிப்பிடித்து கைது செய்தான். அந்த தேவதைகள் சிறையில் அடைக்கப்பட்டனர். இதுகண்டு தேவேந்திரன் கடும் ஆத்திரமடைந்தான்.

உலகில் எங்குமே மழை இல்லாமல் போய்விடும் இக்கட்டான நிலை ஏற்பட்டது. எனவே, தேவர் படை மதுரையை முற்றுகையிட்டது. அமைச்சர் சுமதி தலைமையிலான படை, தேவர் படைகளை எதிர்த்து கடுமையாகப் போரிட்டது.

தேவர் படைக்கு கடும் சேதம். இந்திரன் என்ன செய்வதென தெரியாமல் தவித்தான். வேறு வழியின்றி யாரையும் அழித்துக் கொன்று விடும் தனது வஜ்ராயுதத்தை உக்கிரபாண்டியன் மீது வீசினான். உக்கிரபாண்டியன் கலங்கவில்லை. தன் தந்தை தெய்வமாவதற்கு முன், தனக்கு அளித்த வளையைக் கழற்றி வஜ்ராயுதத்தை நோக்கி வீசினான். அந்த வளை, வஜ்ராயுதத்தை தூள் தூளாக்கி விட்டு, இந்திரனின் கிரீடத்தைத் தட்டிப் பறித்தது.

சற்று தவறியிருந்தாலும், இந்திரனின் தலையே போயிருக்கும். இந்திரன் தலைகுனிந்து நின்றான். தலைவனின் நிலைகண்டு, தேவர் படை அடங்கி ஒடுங்கி உக்கிரபாண்டியனிடம் சரணடைந்தது. உக்கிரபாண்டியன் இந்திரனிடம், இந்திரனே! உன்னை இப்போது என்னால் ஒரு நொடியில் கொல்ல முடியும்.

ஆனால், எதிரிகளிடமும் பரிவுகாட்டும் மண்ணை ஆளும் பாண்டிய இனம் என்பதைப் புரிந்து கொள். இங்கிருந்து சென்றுவிடு, என்று உயிர்ப்பிச்சை கொடுத்தான்.

தேவேந்திரன் அவமானத்துடன் தன்னுலகம் சென்றான். மழை பெய்யாததால் உலக மக்கள் கஷ்டப்படுவார்களே என்பதற்காக, மேக தேவதைகளை விடுவிக்கும்படி உக்கிரபாண்டியனுக்கு ஒரு தூதன் மூலமாக ஓலை அனுப்பினான்.

உக்கிரபாண்டியன் அந்த ஓலையைப் படித்து விட்டு, அவ்வாறு செய்ய இயலாது என்றும், இனி அந்த தேவதைகள் தனக்கு கட்டுப்பட்டு தங்கள் தேசத்தில் மட்டுமே மாதம் மும்மாரி மழை பொழியச் செய்வார்கள், என்றும் பதில் சொன்னான்.

அப்போது, அவையில் இருந்த ஏகவீரன் என்பவன் எழுந்தான். அரசே! பிடிவாதம் வேண்டாம். இந்த பிடிவாதத்தால் நமக்கு தண்ணீர் கிடைக்கலாம். ஆனால், தண்ணீர் என்பது பொதுவான விஷயம். அது உலகம் முழுமைக்கும் வேண்டும். தயவுசெய்து நீங்கள் மேகாதிபதிகளை விடுதலை செய்யுங்கள். நான் இந்திரனின் நண்பன். அவனோடு பேசி, பாண்டியநாட்டில் தவறாமல் மழை பெய்ய ஏற்பாடு செய்து தருகிறேன். இது உறுதி. என்னை நம்பி இதைச் செய்யலாம், என்றான்.

முருகனின் அம்சமான உக்கிரபாண்டியனும் சம்மதம் தெரிவித்தான். மேகாதிபதிகள் இந்திரனைப் போய்ச் சேர்ந்தனர். ஏகவீரன் இந்திரனைச் சந்தித்துப் பேசி பாண்டியநாட்டில் மாதம் மும்மாரி பொழிய ஏற்பாடு செய்தான். நாடு மீண்டும் செழித்தது.

இந்திரனும் உக்கிர பாண்டியனுடன் நட்பு மலர்ந்தது. உக்கிரபாண்டியன் கடைபிடித்த சோமாவார விரதத்தின் பலன் உக்கிரபாண்டியனை மிகுந்த சக்தி வாய்ந்தவனாக மாற்றியது.

கடைசிகாலம் வரை உக்கிர பாண்டிய மன்னன் சோமாவார விரதத்தைக் கடைபிடித்தான், இவ்வளவு சிறப்பு மிக்க சோமாவார விரதத்தை முடிந்த அளவு நாமும் கடைபிடிப்போம்.

தொகுப்பு: கீதாராணி, சென்னை.

# யமனை போக்கும் வழிமுறை

சித்தர்கள் நுரையீரலில் உருவாகும் கோழையை (சளியை யமன் என்ற பெயரில் அழைத்தார்கள். ஏனெனில் இந்த சளியாகிய கோழைதான் மரணத்திற்கு மிக முக்கிய காரணி.

உடம்பில் சளியானது சேர சேர உடல் இயக்கம் குறைகிறது. இரத்த ஓட்டம் தடை படுகிறது. எலும்புகள் வலுவிழக்கிறது. நாடி நரம்புகள் எல்லாம் தளர்ந்து போய் நடமாடும் பிணமாக மனிதன் ஆகிவிடுகிறான். எனவே சளித்தொல்லை இல்லாமல் வாழுகிற மனிதன் தான் நிஜமான ஐஸ்வர்யவனாவான் எனலாம்.

சளித்தொல்லை என்றால் மூக்கடைத்து கொண்டு ஒழுகுதல் மட்டுமே என்ற எண்ண வேண்டாம் எப்போதுமே உடலில் கோழையானது தங்கிக் கொண்டே இருக்கும் அது மிகுதியாகும் போது உடலை தொல்லை செய்யும்.

இந்த சளித்தொல்லையை முற்றிலுமாக நீக்குவதற்கு சித்தர்கள் கபசுத்தி என்ற பெயர் கொடுத்து கரிசாலை நெய் என்ற அற்புதமான மருந்தையும் கூறி இருக்கிறார்கள். கரிசாலை நெய்யை பற்றி பேசாத சித்தர்களே இல்லை என்று சொல்லலாம் சித்தர்களின் மருத்துவ முறையில் மணிமகுடமாக இருப்பது கரிசாலை நெய் என்றால் அது மிகையில்லை.

இந்த நெய்யை சற்று முயற்சி செய்தால் யார் வேண்டுமானாலும் செய்யலாம்.

கரிசலாங்கண்ணி கீரையை வேரோடு வாங்கி வந்து நன்றாக கழுவி அரைக்க வேண்டும்.

அரைக்கப்பட்ட கீரை விழுதை உருண்டையாக பிடித்து ஒரு சுத்தமான நெய்யில் போட்டு சிறிது தூள் செய்த மிளகு சேர்த்து அடுப்பேற்றி மிதமான நெருப்பில் மெழுகு பதமாக காய்ச்சி வடிகட்டி பத்திரபடுத்தி கொள்ள வேண்டும்.

இந்த நெய்யினை சூரியன் உதிக்கும் முன் எழுந்து வலது கை பெருவிரலால் தொட்டு வாயை நன்றாக திறந்து உள்நாக்கில் பின்புறம் உள்ள மேல்நோக்கி அமைந்த துவாரத்தில் தடவி அரைமணிநேரம் காத்திருக்க வேண்டும்.

இந்த நேரத்தில் ஊர்த்துவ நாடி, சுழுமுனை நாடி என்றெல்லாம் சித்தர்களால் சொல்லப்படும் சூட்சம நாடிக்குள் அடங்கி கிடக்கும் கோழை நூல் நூலாக வெளியே வந்து விழும்.கோழையை கழற்றுதல் என்பது இதுவே.

இப்படி நாற்பத்தி எட்டு நாட்கள் தொடர்ந்து செய்தால் உடம்பில் உள்ள தேவையற்ற சளி வெளியேறி, ஆரோக்கியமான நுரையீரல் உடல் முழுவதும் நல்ல பிராணக்காற்றை தரும். இந்த முறையை மூன்று வருடத்திற்கு ஒரு முறை செய்து வர வேண்டும்.









ஆன்மிகமலர் மெயில் புக்



மாதம் தோறும் இரண்டு இதழ்களாக (இ-புக் வடிவில்) வெளிவரும்
ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தில் நீங்களும் இணைந்து ஆன்மிக சேவையாற்றலாம்....

உங்கள் பகுதியில் உள்ள கோயில்களின் சிறப்புகள், மகான்களின் சிறப்புகள், மற்றும் உங்களுக்கு தெரிந்த ஆன்மிக செய்திகளையும் எங்களுடன் பகிருங்கள்...

30ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆன்மிக அன்பர்கள் படித்து பயன்பெற ஒரு பாலமாக இருப்போம்

மேலும் தகவலுக்கு 8825844033 என்ற வாட்சப் எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்



# 25,550 நாட்களா? 36,500 நாட்களா?

# வாழப்போகும் நாட்களில் இவற்றை கடைபிடியுங்கள்

வாழ்க்கையில் வளமாக வாழ, இன்று பலர் பல வழிகளில் முயற்சி செய்கிறார்கள். ஆனால் பணமும், பதவியும், வசதியான வாழ்க்கை மட்டுமே வளமான வாழ்க்கை என்று நினைத்து மனிதர்கள் செயல்படுவதால் கடைசியில் நிம்மதி இல்லாமலேயே மனிதர்கள் ஆயுள் முடிவடைந்து விடுகின்றன.

சராசரியாக 70 வயது என்றால் 25,550 நாட்களும், 100 வயது என்றால் 36,500 நாட்கள் மட்டுமே உண்மையில் நாம் பூமியில் வாழப்போகும் நாட்களாகும். இந்த வாழ்க்கை மட்டுமே வளமாக அமையக்கூடாது, இந்த உடல் பிரிந்தவுடன் கிடைக்கும் வாழ்க்கைக்குத் தேவையான புண்ணியங்களும் வளமாக இருந்தால் மனிதனின் இறுதிக்கட்ட வாழ்வு நல்ல பலன்களை அடையும். இதுதான் உண்மையான வளமான வாழ்க்கையாகும்.

கீழ்காண்பவற்றை பற்றி சற்று சிந்தியுங்கள் இந்த வாழ்க்கைக்கு மட்டுமல்ல இறுதி கட்ட வாழ்க்கைக்கும் சில வகையில் பலன் உள்ளதாக அமையும்.

- ❖ வாழ்வென்பது உயிர் உள்ள வரை மட்டுமே!
- ❖ தேவைக்கு செலவிடு.
- ❖ அனுபவிக்க தகுந்தன அனுபவி.
- ❖ இயன்ற வரை பிறருக்கு உதவி செய்.
- ❖ மற்றும் ஜீவகாருண்யத்தை கடைபிடி.
- ❖ இனி அநேக ஆண்டுகள் வாழப்போவதில்லை.
- ❖ உயிர் போகும் போது, எதுவும் கொண்டு செல்ல போவதுமில்லை. ஆகவே, அதிகமான சிக்கனம் அவசியமில்லை.
- ❖ இறந்த பின் என்ன நடக்கும் என்று மனதளவில் குழம்பாதே.
- ❖ உயிர் பிரிய தான் வாழ்வு. ஒரு நாள் பிரியும். சுற்றம், நட்பு, செல்வம், எல்லாமே பிரிந்து விடும்.
- ❖ உயிர் உள்ள வரை, ஆரோக்கியமாக இரு.
- ❖ உடல் நலம் இழந்து பணம் சேர்க்காதே.
- ❖ உன் குழந்தைகளை பேணு. அவர்களிடம் அன்பாய் இரு. நல்லவற்றையும், தீயவற்றையும் நேரில் அவர்கள் உணர்ந்து கொள்ளும் சூழ்நிலையை அமைத்துக் கொடு.
- ❖ அவ்வப்போது குழந்தைகளுக்கு பரிசுகள் கொடுங்கள், அதே சமயம் தேல்வியின் வடுக்களையும் புரியவையுங்கள்..
- ❖ அவர்களிடம் அதிகம் எதிர்பாராதே. அடிமையாகவும் ஆகாதே.
- ❖ பெற்றோர்களை மதிக்கும் குழந்தைகள் கூட, பாசமாய் இருந்தாலும், பணி காரணமாகவோ, சூழ்நிலை கட்டாயத்தாலோ, உன்னை கவனிக்க இயலாமல் தவிக்கலாம், புரிந்து கொள்!
- ❖ அதைப்போல, பெற்றோரை மதிக்காத குழந்தைகள், உன் சொத்து பங்கீட்டுக்கு சண்டை போடலாம்.
- ❖ உன் சொத்தை தான் அனுபவிக்க, நீ சீக்கிரம் சாக வேண்டுமென, வேண்டிக் கொள்ளலாம். இதுகூட ஒருவித அனுபவமாக நினைத்துக்கொள், வருத்தப்படும் எண்ணத்தை வளர்த்துக் கொள்ளாதே.
- ❖ அவர்கள் உரிமையை மட்டும் அறிவர்; கடமை மற்றும் அன்பை அறியார் வாழும்போது அவற்றை சொல்லிக்கொடுக்க தவறாதே.
- ❖ “அவரவர் வாழ்வு, அவரவர் விதிப்படி” என அறிந்து கொள். இதை மற்றவர்களும் தெரிந்து கொள்ள வை.
- ❖ இருக்கும் போதே குழந்தைகளுக்கு கொடு.
- ❖ ஆனால், நிலைமையை அறிந்து, அளவோடு கொடு. எல்லாவற்றையும் தந்து விட்டு, பின் கை ஏந்தாதே.
- ❖ “எல்லாமே நான் இறந்த பிறகு தான்” என, உயில் எழுதி வைத்திராதே. நீ எப்போது இறப்பாய் என எதிர் பார்த்து காத்திருப்பர்.
- ❖ எனவே, கொடுப்பதை நினைப்பதை மட்டும் முதலில் கொடுத்து விடு; மேலும் தர வேண்டியதை, பிறகு கொடு.
- ❖ மாற்ற முடியாததை, மாற்ற முனையாதே.
- ❖ மற்றவர் குடும்ப நிலை கண்டு, பொறாமையால் வதங்காதே!
- ❖ அமைதியாக, மகிழ்ச்சியோடு இரு.
- ❖ பிறரிடம் உள்ள நற்குணங்களை கண்டு பாராட்டு.
- ❖ நண்பர்களிடம் அளவளாவு.
- ❖ நல்ல உணவு உண்டு, நடை பயிற்சி செய்து, உடல் நலம் பேணி, இறை பக்தி கொண்டு, குடும்பத்தினர், நண்பர்களோடு கலந்து உறவாடி, மன நிறைவோடு வாழ்.
- ❖ இன்னும் இருபது, முப்பது, நாற்பது ஆண்டுகள், சுலபமாக ஓடி விடும்!
- ❖ வாழ்வை கண்டு களி!
- ❖ ரசனையோடு வாழ்!
- ❖ வாழ்க்கை வாழ்வதற்கே!
- ❖ மடையன், சுயநலக்காரன், முட்டாள், ஓய்வாக இருப்பவன் இந்த நான்கு நபர்களை புறக்கணி!
- ❖ பொய்யன், துரோகி, பொறாமைக்கைரன், மமதை பிடித்தவன், இந்த நான்கு நபர்களுடன் தோழமை கொள்ளாதே!
- ❖ அனாதை, ஏழை, முதியவர், நோயாளி, இந்த இந்த நபர்களுடன் கடினமாக நடக்காதே!
- ❖ மனைவி, பிள்ளைகள், குடும்பம், சேவகன், இவர்களுக்கு உனது கொடையை தடுக்காதே!
- ❖ பொறுமை, சாந்த குணம், அறிவு, அன்பு, இந்த விசயங்களை ஆபரணமாக அணி!
- ❖ தந்தை, தாய், சகோதரன், சகோதரி, இவர்களை வெறுக்காதே!
- ❖ உணவு, தூக்கம், சோம்பல், பேச்சு, இவற்றை குறையுங்கள்!
- ❖ துக்கம், கவலை, இயலாமை, கஞ்சத்தனம், இவற்றை தூக்கிப்போடு!
- ❖ மனத்தூய்மை உள்ளவன், வாக்கை நிறைவேற்றுபவன், கண்ணியமானவன், உண்மையாளன், இவர்களுடன் எப்போதும் சேர்ந்து இரு!
- ❖ தியானம், யோகா, நூல் வாசிப்பு, உடற்பயிற்சி, சேவை செய்தல், இந்த விசயங்கள் அதிகம் செய்யுங்கள்!

வாழ்க்கை வளம் பெற இத்தகைய செயல்கள் ஒருவகையில் உதவலாம், கடைபிடியுங்கள்.

# இறையருள் மட்டுமின்றி மருந்தாகப் பயன்படும் ருத்ராட்சம்



உருத்திராட்ச மணிகளைத் தரும் உருத்திராட்ச மரம் என்பது ஒரு மூலிகைத் தாவரம். சித்த, ஆயுர்வேதமருத்துவங்களில் இவை மருந்துப் பொருட்களாக பயன்படுத்தப்படுகின்றன.மிக அரிதான சில தகவல்களை பார்ப்போம்.

உருத்திராட்ச மரத்தின் பழமானது கடினமான ஓட்டுடன் கருநீலமாய் இருக்கும். இதன் உள்ளே இருக்கும் சதைப் பகுதியானது புளிப்பான சாறு நிறைந்திருக்கும். மூளையில் உள்ள திசுக்கள் பாதிக்கப் படுவதால் உருவாகும் "காக்காய் வலிப்பு" என்கிற epilepsy க்கு இந்த பழத்தின் சாறு அருமருந்தாக கூறப்படுகிறது. மேலும் cough, bronchitis, nerve pain, migraine போன்ற வியாதிகளுக்கு நல்ல பலனை தருகிறது.

ஒருமுக உருத்திராட்ச மணியை உடலில் அணிவதன் மூலம் ஆஸ்த்துமா, எலும்புருக்கி நோய், மூட்டுவலி, பக்கவாதம், கண்களில் ஏற்படும் பிரச்சினைகளின் தீவிரத்தை தணிக்க முடியும்

இருமுக உருத்திராட்ச மணியை உடலில் அணிவதன் மூலம் தீக்காயங்களின் பாதிப்பில் இருந்து விடுபடலாம் என கூறப்பட்டிருக்கிறது. மேலும் கவனசிதறல், மன அழுத்தம், குழந்தைபேறு இல்லாதவர்கள் இருமுக மணியை உடலில் அணிவதன் மூலம் நல்ல பலன் பெறமுடியும்.

மூன்று முக மணியினை அணிவதால் ஆயுதங் களினால் ஏற்படும் காயங்களின் பாதிப்பினை குறைக்கலாமாம். மேலும் தாழ்வு மனப்பான்மை, எதிர்மறை சிந்தனையுடைய்வர்களுக்கு நல்ல பலனை அளிக்குமாம்.

நான்கு முக உருத்திராட்ச மணியை உடலில் அணிவதன் மூலம் இருமல் தொல்லைகளில் இருந்து தீர்வு பெறலாம். மேலும் இரத்த ஓட்டம் சிறப்பாகும்.

ஐந்துமுக உருத்திராட்ச மணியை உடலில் அணிவதன் மூலம் உடல்பருமன் பிரச்சினைகள் மற்றும் இதயக் கோளாறு உடையவர்களுக்கு நல்ல பலனைத் தருமாம்.

ஆறுமுக உருத்திராட்ச மணியை உட லில் அணிவதன் மூலம் குழந்தையின்மை, வலிப்பு மற்றும் பேச்சாற்றல் திறன் பாதிக்கப் பட்டவர் களுக்கு நல்ல பலனைத் தரும்.

ஏழுமுக உருத்திராட்ச மணியை உடலில் அணிவதன் மூலம் மூச்சுக் கோளாறு மற்றும் கால்களில் பாதிப்புடையவர்களுக்கு நல்ல பலனைத் தரும்.

எட்டுமுக உருத்திராட்ச மணியை உடலில் அணிவதன் மூலம் வயிறு தொடர்பான பிரச் சினைகள், தோல்வியாதிகளுக்கு நல்ல தீர்வு கிடைக்கும்.

ஒன்பதுமுக உருத்திராட்ச மணியை உடலில் அணிவதன் மூலம் தன்னம்பிக்கை பெருகி உடல் ஆரோக்கியம் மிளிரும்

பத்துமுக உருத்திராட்ச மணியை உடலில் அணிவதன் மூலம் உறுதியான மனநலம் வாய்க்கும்.

பொதுவில் உருத்திராட்ச மணிகள் தங்களை சுற்றியுள்ள வெப்பத்தை கிரகித்துக் கொண்டு சுற்றுப் புறத்தினை குளிர்விக்கும் தன்மை யுடைவை. இதனை நம் உடலில் அணிவதால் தேகம் குளிர்ச்சியாகும் என கூறப் படுகிறது. நம் துறவிகள் ஏராளமான உருத்திராட்ச மணிகளை அணிந்தன் பின்னால் இத்தகைய அறிவியல் இருந்திருக்கக் கூடும்.

நாம் அருந்தும் நீரில் உருத்திராட்ச மணியை ஐந்து நிமிடம் ஊற வைத்து அந்த நீரைப் பருக உயர் குருதி அழுத்தம் கட்டுக்குள் வருமாம். தீராத காய்ச்சல் உள்ளவர்களுக்கு பழைய உருத்திராட்ச மணியை தேனில் உரைத்துக் கொடுக்க காய்ச்சல் குறையுமாம். இதைப் போலவே உருத்திராட்சக் கொட்டையினை குடிக்கும் நீரில் ஐந்து நிமிடம் ஊற விட்டு அந்த நீரில் சிறிது மஞ்சள் தூளை சேர்த்துக் கலக்கி அருந்தினால் எத்தகைய இருமல் மற்றும், வாந்தி தணியுமாம்.

– தொகுப்பு: கதிர்வேலன்,
செம்பியம், சென்னை.

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033



ஆன்மிகமலர் மெயில் புக்

# உடல்நலம் ஆரோக்கிய வாழ்வு தரும்

# தமிழ்மொழி உச்சரிப்பு



குண்டலினி யோகத்தின்போது ஒவ்வொரு சக்தி ஆதார சக்கரங்களில் இருந்து தாமரை இதழைப் போல நாடிகள் வெளிக் கிளம்பும்.

இதன் பின்னே இருக்கும் சூட்சுமமும் சென்ற (74வது) இதழில் பார்த்த பஞ்சக்கார சக்கரத்தில் தமிழ் எழுத்துக்களின் முக்கியத்துவத்தைப் பற்றி பார்ப்போம்.

குண்டலினி யோகத்தின் போது மூலாதாரத் தில் நான்கு இதழ்களும், சுவாதிஷ்டானத்தில் ஆறு இதழ்களும்; மணிபூரகத்தில் பத்து இதழ் களும், அநாகதத்தில் பன்னிரெண்டு இதழ்களும், விசுத்தியில் பதினாறு இதழ்களும், ஆக்ஞையில் இரண்டு இதழ்களும் வெளிக் கிளம்பும் இந்த நாடிகள் அதிரும் போது ஒலி உருவாகும்.

சித்தரியலில் பஞ்சாக்கர எழுத்துக்கள் என்பது மிக நுட்பமானது, சூட்சுமம் நிறைந்ததும் கூட. பஞ்சாக்கரம் என்பது ஐம்பத்தியோரு தமிழ் எழுத்துக்களையே குறிக்கிறது. "சிதம்பர சக்கரம்" எனப்படும் திருவம்பலச் சக்கரத்தின் உயிர் நாடியாகவும் இந்த எழுத்துக்களே விளங்குகிறது.

அகத்தியர் துவங்கி திருமூலர், பட்டினத்தார், சிவவாக்கியார், கோரக்கர் போன்ற பல சித்தர் பெருமக்கள் இந்த ஐம்பத்தி ஒன்று எழுத்துக் களின் மகத்துவத்தை பாடியுள்ளனர்.

திருமூலர் தனது திருமந்திர மாலை என்னும் நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"பெறுதியில் அம்முதல் பேசும்க்ஷவ் வீறாய்
அறிவதெழுத்தைம்பத் தொன்றுமங்
கானதே"

என்று குறிப்பிடுகிறார்

மேலும் திருமூலரே தனது திருமந்திரம் என்னும் நூலிலும் பஞ்சாக்கரம் பற்றி...

"அடையும் மகாரத்தில் அந்தமாம் க்ஷவ்வும்
அடைவின் எழுத்துஐம் பத்தொன்றும்
அமர்ந்ததே."

என்றும் குறிப்பிடுகிறார்.

அருணகிரி நாதரும் தனது திருப்புகழில் பஞ்சாக்கரத்தை...

"அகர முதலென உரைசெய்
ஐம்பத்தோரட்சரமும்"

இவ்வாறு குறிப்பிடுகிறார்.

இப்படி இன்னும் எத்தனையோ சித்தர்களின் பாடல்களை பஞ்சாக்கரத்திற்கு எடுத்துக் காட்டாய்ச் சொல்லலாம். இவற்றின் படி, இந்த ஐம்பத்தி ஒரு எழுத்துக்களையும் மிக முக்கிய மானதாகவும், உயர் தனித்துவமானவை என்று போற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்போது மீண்டும் குண்டலினிக்கு வருவோம். குண்டலினி யோகத்தில் ஏழு முக்கிய ஆதாரங்களில் இருந்து வெளிக்கிளம்பும் நாடிகளின் அதிர்வுகளால் ஏற்படும் ஒலிகளை தமிழ் எழுத்துக்களாக குறித்திருக்கின்றனர். தற்போது தமிழ் எழுத்துக்களின் சக்தி எவ் வளவு உண்ணதமானது என்று தெரியும்.

அதேபோன்று, குண்டலினி யோகத்தில் ஒவ்வொரு ஆதார மையமும் சித்திக்கும் போது உருவாகும் அதிர்வுகள் எழுப்பும் ஓசை யைத்தான் சித்தர்கள் பஞ்சாக்கர எழுத்துக்கள் என குறிப்பிட்டிருக்கின்றனர்.

ஆறு ஆதார சக்கரத்தில் இருந்து எழும்பும் ஐம்பது நாடிகளின் சப்பதங்கள் அம்பது எழுத்துக்களாகவும், துரிய நிலை சித்திக்கும் போது உருவாகும் உருவாகும் பேசாமொழியான ஒரெழுத்தும் சேர ஐம்பத்தியோரு எழுத்துக்கள் ஆகின்றன. இந்த பேசா மொழியைப் பற்றி 74வது புத்தகத்தில் கூறியுள்ளோம். இதனை நாயோட்டு மந்திரம் என்றும் அழைப்பர்.

வேறெந்த மொழிக்கும் இல் லாத சிறப்பு இது. இதனை மனதில்

**தமிழை அழுத்தம் திருத்தமாய் உச்சரித்து பேசினாலே உடல்நலம், ஆன்மநலம் சிறக்கும் என சித்தர்கள் கூறியிருக்கின்றனர். இன்று தமிழ்... தமிழ்... என்று கதறும் ஒருசில தலைவர்களும், நெறியாளர்களும் நாய் போன்று கத்தி கத்தி பேசி தமிழர்களையும், தமிழ்மொழியையும் கொலை செய்துக் கொண்டிருக்கின்றனர்.**

கொண்டே நம் பெரியவர்கள் தமிழை அழுத்தம் திருத்தமாய் உச்சரித்து பேசினாலே உடல்நலம், ஆன்மநலம் சிறக்கும் என கூறியிருக்கின்றனர்.

இன்று தமிழ்... தமிழ்... என்று கதறும் ஒருசில தலைவர்கள் நாய் போன்று கத்தி கத்தி பேசி தமிழர்களையும், தமிழ்மொழியையும் கொலைசெய்துக்கொண்டிருக்கின்றனர். இதில் ஊடகங்களும் தமிழை டமிழாக்கி வைத்து அதை நமது பிள்ளைகளுக்கு கற்றுத்தறுவது வேதனைதான்.

இனியாவது நாம் சிந்தித்து, தெளிந்த தமிழ்மொழியினை பேசியே, நமது சந்ததியினர் தெளிவான தமிழை அழுத்தம் திருத்தமாய் உச்சரித்து பேச வைத்து, அவர்களின் உடல் நலம், ஆன்மநலம் சிறக்க வழிவகை செய்ய வேண்டும்.

திருக்குறள், தேவாரம், திருவாசகம், திருவெம்பாவை, மணிமேகலை, சீவகசிந்தா மணி போன்ற தமிழ் காப்பியங்களை அழுத்தந்திருந்தமாக உச்சரிக்க வைக்கப் பழக்கப்படுத்தினாலே தமிழ்மொழி நமக்கு நீண்ட ஆரோக்கியத்தை தரும். இதை சித்தர்களே பல பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளனர்.



– ஷியாம் சுந்தர்
மதுரை



# லட்சுமி கடாட்சம் தரும் மந்திரம்

**நவராத்திரி விழாவில் கீழ்காணும் இந்த மந்திரத்தை பெண்கள் தினமும் துதித்து வந்தால், அனைத்து லஷ்மி ரூபங்களையும் ஒரேநேரத்தில் வழிபட்ட பலன் கிடைக்கும்.**

அற்புதமான பழைய ஓலைச்சுவடிகளில் சமஸ் கிருதத்தில் எழுதப்பட்ட மகாலட்சுமி ஸ்து திகளை படிக்க ஏதுவாக எளிமைப்படுத்தப்பட்ட இந்த மந்திரத்தை நமது வாசகர்களுக்கு கொடுத் துள்ளார், நவநீத கிருஷ்ணன்.

குறிப்பாக பெண்களுக்கு மிகவும் முக்கிய மானதாகும்.தினமும் பூஜை அறையில் மனமுருகி 11முறை கூறி வழிபட சகல சம்பத்துகளும் பெருகிடும். (பலபேர் பயன்படுத்தி பலன் பெற்றது.) என்று கூறியுள்ளார். நமது வாசகர்களும் அவசியம் பயன்படுத்தி பலன் பெறவேண்டிய நோக்கத்தில் பதிவிடப்பட் டுள்ளது.

## மகாலட்சுமி ஸ்துதி

சுத்தலக்ஷ்ம்யை புத்திலக்ஷ்ம்யை
வரலக்ஷ்ம்யை நமோ நம:
நமஸ்தே சௌபாக்யலக்ஷ்ம்யை
மஹாலக்ஷ்ம்யை நமோ நம:
❖❖❖
வசோலக்ஷ்ம்யை காவ்யலக்ஷ்ம்யை
காநலக்ஷ்ம்யை நமோ நம:
நமஸ்தே ச்ருங்காரலக்ஷ்ம்யை
மஹாலக்ஷ்ம்யை நமோ நம:
❖❖❖
தநலக்ஷ்ம்யை தான்யலக்ஷ்ம்யை
தராலக்ஷ்ம்யை நமோ நம:
நமஸ்தே அஷ்டைச்வர்ய லக்ஷ்ம்யை
மஹாலக்ஷ்ம்யை நமோ நம:
❖❖❖
க்ருஹலக்ஷ்ம்யை க்ராமலக்ஷ்ம்யை
ராஜ்யலக்ஷ்ம்யை நமோ நம:
நமஸ்தே ஸாம்ராஜ்யலக்ஷ்ம்யை
மஹாலக்ஷ்ம்யை நமோ நம:
❖❖❖
சாந்திலக்ஷ்ம்யை தாந்திலக்ஷ்ம்யை
க்ஷேமலக்ஷ்ம்யை நமோ நம:
நமஸ்தே அஸ்த்வாத்மாநந்தலக்ஷ்ம்யை
மஹாலக்ஷ்ம்யை நமோ நம:
❖❖❖
ஸத்யலக்ஷ்ம்யை தயாலக்ஷ்ம்யை
ஸௌக்கிய லக்ஷ்ம்யைநமோ நம:
நம: பாதிவ்ரத்யலக்ஷ்ம்யை
மஹாலக்ஷ்ம்யை நமோ நம:
❖❖❖
கஜலக்ஷ்ம்யை ராஜலக்ஷ்ம்யை
தேஜோலக்ஷ்ம்யை நமோ நம:
நம: ஸர்வோத்கர்ஷலக்ஷ்ம்யை
மஹாலக்ஷ்ம்யை நமோ நம:
❖❖❖
ஸத்வலக்ஷ்ம்யை தத்வலக்ஷ்ம்யை
போதலக்ஷ்ம்யை நமோ நம:
நமஸ்தே விஜ்ஞானலக்ஷ்ம்யை
மஹாலக்ஷ்ம்யை நமோ நம:
❖❖❖
ஸ்தைர்யலக்ஷ்ம்யை வீர்யலக்ஷ்ம்யை
தைர்ய லக்ஷ்ம்யை நமோ நம:
நமஸ்தே அஸ்த்வௌதார்யலக்ஷ்ம்யை
மஹாலக்ஷ்ம்யைநமோ நம:
❖❖❖
ஸித்திலக்ஷ்ம்யை
ருத்திலக்ஷ்ம்யை
வித்யாலக்ஷ்ம்யை நமோ நம:
நமஸ்தே கல்யாணலக்ஷ்ம்யை
மஹாலக்ஷ்ம்யை நமோ நம:
❖❖❖
கீர்த்திலக்ஷ்ம்யை
மூர்த்திலக்ஷ்ம்யை
வர்ச்சோலக்ஷ்ம்யை நமோ நம:
நமஸ்தே த்வநந்தலக்ஷ்ம்யை
மஹாலக்ஷ்ம்யை நமோ நம:
❖❖❖
ஜபலக்ஷ்ம்யை
தபோலக்ஷ்ம்யை
வ்ரதலக்ஷ்ம்யை லக்ஷ்ம்யை
நமோ நம:
நமஸ்தே வைராக்யலக்ஷ்ம்யை
மஹாலக்ஷ்ம்யை நமோ நம:
❖❖❖
மந்த்ரலக்ஷ்ம்யை
தந்த்ரலக்ஷ்ம்யை
யந்த்ரலக்ஷ்ம்யை நமோ நம:
நமஸ்தே குருக்ருபாலக்ஷ்ம்யை
மஹாலக்ஷ்ம்யை நமோ நம:
❖❖❖
ஸபாலக்ஷ்ம்யை
ப்ரபாலக்ஷ்ம்யை
கலாலக்ஷ்ம்யை நமோ நம:
நமஸ்தே லாவண்யலக்ஷ்ம்யை
மஹாலக்ஷ்ம்யை நமோ நம:
❖❖❖
வேதலக்ஷ்ம்யை
நாதலக்ஷ்ம்யை
சாஸ்த்ரலக்ஷ்ம்யை நமோ நம:
நமஸ்தே வேதாந்தலக்ஷ்ம்யை
மஹாலக்ஷ்ம்யை நமோ நம:
❖❖❖
சேத்ரலக்ஷ்ம்யை
தீர்த்தலக்ஷ்ம்யை
வேதிலக்ஷ்ம்யை நமோ நம:
நமஸ்தே ஸந்தானலக்ஷ்ம்யை
மஹாலக்ஷ்ம்யை நமோ நம:
❖❖❖
யோகலக்ஷ்ம்யை
போகலக்ஷ்ம்யை
யக்ஞலக்ஷ்ம்யை நமோ நம:
க்ஷீரார்ணவ புண்யலக்ஷ்ம்யை
மஹாலக்ஷ்ம்யை நமோ நம:
❖❖❖
அன்னலக்ஷ்ம்யை
மநோலக்ஷ்ம்யை
ப்ரக்ஞாலக்ஷ்ம்யை நமோ நம:
விஷ்ணுவக்ஷோபூஷலக்ஷ்ம்யை
மஹாலக்ஷ்ம்யை நமோ நம:
❖❖❖
தர்மலக்ஷ்ம்யை
அர்த்தலக்ஷ்ம்யை
காமலக்ஷ்ம்யை நமோ நம:
நமஸ்தே நிர்வாணலக்ஷ்ம்யை
மஹாலக்ஷ்ம்யை நமோ நம:
❖❖❖
புண்யலக்ஷ்ம்யை
சேமலக்ஷ்ம்யை
ச்ரத்தாலக்ஷ்ம்யை நமோ நம:
நமஸ்தே சைதன்யலக்ஷ்ம்யை
மஹாலக்ஷ்ம்யை நமோ நம:
❖❖❖
பூலக்ஷ்ம்யை தே
புவர்லக்ஷ்ம்யை
ஸுவர்லக்ஷ்ம்யை நமோ நம:
நமஸ்தே
த்ரைலோக்யலக்ஷ்ம்யை
மஹாலக்ஷ்ம்யை நமோ நம:
❖❖❖
மஹாலக்ஷ்ம்யை
ஜனலக்ஷ்ம்யை
தபோலக்ஷ்ம்யை நமோ நம:
நம: ஸத்யலோகலக்ஷ்ம்யை
மஹாலக்ஷ்ம்யை நமோ நம:
❖❖❖
பாவலக்ஷ்ம்யை
வ்ருத்திலக்ஷ்ம்யை
பவ்யலக்ஷ்ம்யை நமோ நம:
நமஸ்தே
வைகுண்டலக்ஷ்ம்யை
மஹாலக்ஷ்ம்யை நமோ நம:
❖❖❖
நித்யலக்ஷ்ம்யை
ஸத்யலக்ஷ்ம்யை
வம்சலக்ஷ்ம்யை நமோ நம:
நமஸ்தே கைலாஸலக்ஷ்ம்யை
மஹாலக்ஷ்ம்யை நமோ நம:
❖❖❖
ப்ரகிருதிலக்ஷ்ம்யை
ஸ்ரீலக்ஷ்ம்யை
ஸ்வஸ்திலக்ஷ்ம்யை நமோ நம:
நமஸ்தே கோலோகலக்ஷ்ம்யை
மஹாலக்ஷ்ம்யை நமோ நம:
❖❖❖
சக்திலக்ஷ்ம்யை
பக்திலக்ஷ்ம்யை
முக்திலக்ஷ்ம்யை நமோ நம:
நமஸ்தே த்ரிமூர்த்தி
லக்ஷ்ம்யை மஹாலக்ஷ்ம்யை
நமோ நம:
❖❖❖
நமச்சக்ரராஜ லக்ஷ்ம்யை
ஆதிலக்ஷ்ம்யை நமோ நம:
நமோ ப்ரும்மானந்த
லக்ஷ்ம்யை
மஹாலக்ஷ்ம்யை நமோ நம:
❖❖❖





# ராகு - ஆசை
# கேது - விரக்தி

## நிழல் கிரகங்களின் ரகசியம்



நவகிரகங்கள் எனப்படும் 9 கோள்களில் 7 கோள்களை நாம் வான்மண்டலத்தில் காண இயலும் ஆனால் இந்த இராகு கேது எனப்படும் நிழல் கிரகங்களை மட்டும் நாம் காணஇயலாது உடனே அதை சாயக்கிரகங்கள் கண்ணுக்கு தெரியாது என்பார்கள் உண்மையை சொல்ல போனால் அவை இரண்டும் சாயக்கிரகங்கள் கிடையாது சாயக் கதிர்கள் (The dark shadow)

ஆம் இராகு -கேதுகள் என சொல்லப்படுவது சூரியகிரகணமும் சந்திரகிரகணமும் தான் அதாவது சூரிய மறைப்பு (ராகு) சந்திர மறைப்பு (கேது)

இந்த சூரிய மறைப்பு எனப்படும் சூரிய கிரகணம் எப்படி நிகலும் என்றால் சூரியனும் சந்திரனும் ஒரே நேர் கோட்டில் சந்திக்கும் (accurate 0°) அப்பொழுது சூரியனை நிலவு முழுமையாக மறைக்கும் அதனால் சூரியனின் ஒளி சிறிது அளவு கூட பூமி மீது படாது ஆகை யால் நிலவில் இருந்து ஒரு கருப்புஒளி பூமி மீது வந்து விழும் அந்த கருப்பு கதிர்வீச்சு தான் ராகு ஆகையால் தான் புராணங்களில் இராகு பற்றிய சொல்லும் போது கருநிறபாம்பு





என்று கூறபடுகிறது.

சந்திரகிரகணத்தின் போது சூரியனும் பூமியும் ஒரே நேர்கோட்டில் சந்தித்து பூமி சந்தி ரனை முழுவதுமாக மறைக்கும் சூரியனின் ஒளி சிறிது கூட சந்திரன் மீது படாது (sun and moon in 180°) ஆகையால் பூமியில் இருந்து ஒரு சிகப்புஒளி நிலவின் மீது படும் அந்த சிகப்பு ஒளி தான் கேது ஆகையால் தான் கேதுவை பற்றிய பாடல்களில் கேதுவை செந்நிறபாம்பு என்று குறிபிட்டனர்.

அதாவது இராகு என்பது அமாவாசைகேது என்பது பௌர்ணமி. அமாவாசை அன்றும் நிலவு சூரியனை மறைத்து ஒரு கருப்பு ஒளி பூமியின் மீது படதான் செய்யும் (but not accurate 0°) ஆனால் முழுமையாக மறைக்காது (Not cent percent) முழுமையாக நிலவு சூரியனை மறைக் கும் நிகழ்வு சரியாக 1½ ஆண்டுகளுக்கு ஒருமுறை தான் நடைபெறும் (accurate 0°)(சூரியகிரகணம்) அப்பொழுது தான் நிலவின் முழுமையான நிழல் பூமியின் மீது விழும். இதே விதி தான் பௌர்ணமிக்கும் பௌர்ணமி அன்றும் பூமி நிலவை மறைத்து பூமியின் சிகப்பு நிழல் சிறிதளவு நிலவின் மீது படதான் செய்யும் (but not accurate 180°) ஆனால் முழுமையான சந்திரன் மறைப்பு சந்திர கிரகணத்தின் அன்றுதான் நடைபெறும் அப்பொழுது தான் பூமியின் சிகப்பு நிழல் முழுவதுமாக நிலவின் மீது படும் (perfect 180°)அதாவது பரிபூரன அமாவாசை தான் சூரியகிரகணம் பரிபூரன பௌர்ணமி தான் சந்திரகிரகணம்.

அதாவது 1½ ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழும் சூரியகிரகணமும் சந்திர கிரகணமும் தான் இந்த இராகுகேது. ஆகையால் தான் ஜோதிடத்தில் இராகு-கேது பெயற்சிகளும் சரியாக 1½ ஆண்டுகளுக்கு ஒரு முறை நடை பெறுகின்றன.

இந்த சூரிய மரைப்பு சந்திர மரைப்பைதான் புராணங்களில் பாம்பு சூரியனை விழுங்கி விட்டது சந்திரனை விழுங்கி விட்டது என் பார்கள். அவர்கள் நிலவைதான் பாம்பென உருவகம் செய்துள்ளனர். ஆகையால் தான் சூரியகிரகணத்தின் போது சூரியனை மறைக்கும் நிலைவை பாம்பின் உடலாகவும் மறைக்கப்படும் சூரியனை மனித தலையாகவும் (மனித தலை பாம்பின் உடல்) உருவகம் செய்துள்ளனர்.





சந்திர கிரகணத்தின் போது சந்திரனை மறைக்கும் பூமியை மனித உடலாகவும் மறைக்கப்படும் நிலவை பாம்பின் தலையாகவும் (பாம்பு தலை மனித உடல்) உருவகம்செய்துள்ளனர்.

நிலவை எதற்கு பாம்பென உருவகம் செய்தனர் என்றால் நிலவு பூமியை சுற்றும் வடிவம் ஆனது பாம்பு ஊர்ந்து செல்வது போல் தான் இருக்கும் ஆகையால் தான் நிலவை பாம்பென உருவகம் செய்துள்ளனர்.

## இராகு-கேதுவின் மர்மங்கள்

ராகு என்றால் ஆசை கேது என்றால் விரக்தி. நாம் இப்புவியில் பிறக்க முக்கிய காரணமாக அமைவதே இந்த இராகு எனும் ஆசை தான். நாம் இந்த உலக வாழ்கையில் இருந்து விடுபெற்று வீடுபேற்றுனை (மோட்சம்) அடைய உதவுவது இந்த கேது எனும் விரக்தி தான். இந்த இராகுவும் கேதுவும் நேர் எதிர் ஆனவர்கள் அதாவது இந்த Vanhelsing படத்தில் வரும் Dragula (ராகு) Werewolf (கேது) மாதிரி.

இராகுவின் ஒளி பூமியின் மீது விழுவதால் இந்த உலகில் உள்ள அனைத்து வகையான சுகபோகங்களையும் அனுபவித்து வாழ்ந்து இறந்தவர்களுக்கு (மீண்டும் பூமியில் பிறப்பவர்கள்) இராகுவின் உரிய நாள் ஆன அமாவாசை அன்று சிறப்பு செய்யபடுகிறது.

ஆகையால் தான் நாம் நம் முன்னோர்களுக்கு தரப்படும் திதி தர்பனம் போன்ற வற்றை அமாவாசை அன்று செய்கிறோம். கேதுவின் சிகப்பு ஒளி பூமிக்கு வெளியில் சென்று விழுவ தால் எப்பொழுது இப்பூமிக்கு அப்பார் பட்ட சிந்தனையிலே வாழ்ந்து மோட்சம் அடைந்த சித்தர்கள் ரிஷிகளுக்கு கேதுவிற்கு உரிய நாளான பௌர்ணமி அன்று சிறப்பு செய்யப் படுகிறது.

## முற்பிறவி இரகசியம் பேசும் இராகு கேது

இந்த இராகு-கேதுகள் நம் ஜாதகத்தில் முற்பிறவியின் இரகசியம் சொல்லும் ஆற்றல் கொண்டது. நம் ஜாதகத்தில் உள்ள 12 கட்டங்களில் இராகு எந்த கட்டத்தில் அமர்கிறதோ அந்த கட்டத்திற்கு உரிய காரகத்துவங்கள் நமக்கு எவ்வளவு கிடைத்தாலும் பத்தாது ஒரு தீராத தாகம் போல் இருந்துகொண்டே தான் இருக்கும்.

அதற்கு காரணம் நாம் நமது முற்பிறவியில் அந்த கட்டத்திற்கு உரிய காரகத்துவத்தை துளி அளவு கூட அனுபவித்திருக்க மாட்டோம். அது ஒரு நிறைவேறாத ஆசையாக நமக்கு கடைசி வரை இருந்திருக்கும். அதாவது முற்பிறவியில் நாம் எந்தவிசையத்திற்காக ஏங்கினோமோ எந்த ஆசை நமக்கு கடைசிவரை நிறைவேறவில்லையோ அவை எல்லாம் இப் பிறவியில் இராகு வின் கட்டுபாட்டிற்குள் வந்து விடும் ஆகையால் இப்பிறவியில் அது எவ்வளவு கிடைத்தாலும் நமக்கு பத்தாது தீராத தாகமாக இருந்து கொண்டே இருக்கும்.

அதை போல் தான் கேதுவும் கேது 12 கட்டங்களில் எந்த கட்டத்தில் அமர்கிறதோ அந்த கட்டத்திற்கு உரிய காரகத்துவங்கள் இப்பிறவியில் நமக்கு கிடையாது.நாம் அந்த கட்டத்திற்காக எவளவு தான் உழைத்தாலும் பாடுபட்டாலும் கேது அமர்ந்த கட்டத்தின் மூலம் எந்த நன்மையும் கிடைக்காது அதற்கு காரணம் முற்பிறவியில் நாம் போதும்_போதும் என அனுபவித்து திருப்தி அடைந்த விசயங்கள் மற்றும் நாம் நிறைவேற்ற தவரிய கடமைகள் அனைத்தும் இவ்பிறவியில் கேதுவின் கட்டுப்பாட்டில் ஆகையால் தான் கேது அமர்ந்த கட்டத்திற்கு சொந்தமான காரகத்துவங்கள் நமக்கு இப்பிறவியில் கிடையாது முதலில் அந்த காரகத்துவங்கள் மீது நமக்கு ஆசையே வராது காரணம் அது முற்பிறவியிலே நாம் நன்கு அனுபவித்த விசயம்.







இதை ஒரு எடுத்துக்காட்டு மூலம்சொல்ல வேண்டும் என்றால் ஒருவனுக்கு 7-ஆம் கட்டத்தில் இராகு அமர்ந்தால் 7- ஆம் கட்டம் என்பது நம் துணையை பற்றி சொல்ல கூடியது (Partners) நமக்கு நம் துணையின் மீது எப்பொழுதும் ஒரு தீராத ஆசை இருந்து கொண்டே இருக்கும் நம் துணை நமக்கு எவ்வளவு தான் ஒத்துழைப்பு தந்தாலும் நமக்கு எவ்வளவு தான் நன்மை செய்தாலும் நமக்கு திருப்தி என்பதே கிடையாது இன்னும் இன்னும் என்று தான் கேட்டுகொண்டே இருப் போம் ஆகையால் தான் இராகுவிற்கு வாய் மட்டும் தான் வயிறே கிடையாது நாம் எவ்வளவு தான் தந்தாலும் உடம்பில் தங்காது வேண்டும் வேண்டும் என்று கேட்டுகொண்டே தான் இருக்கும்.

அதே 7 ஆம் கட்டத்தில் ஒருவனுக்கு கேது இருந்தால் முதலில் அவனுக்கு அவனின் துணை மீது விருப்பமே இருக்காது அதையும் மீறி அவன் தன் துணைக்கு எவ்வளவு செய்தாலும் திரும்பி ஒன்றும் வராது கடமையை செய் பலனை எதிர்பார்காதே என்பதை போல தான் இருக்கும் காரணம் அது அவனின் முற் பிறவிகடன்(Dept)அவன் நிறைவேற்ற தவறிய கடைமை.

ஆக இந்த நிழல் கதிர்கள் எனப்படும் இராகு கேது வை பற்றி முழுமையாக அறிந்தவர்கள் யாரும் கிடையாது என்றே கூறலாம்.காரணம் எல்லா கிரகமும் Clockwise யில் சுற்றினால் இந்த இராகுகேது கள் மற்றும் Anticlockwise யில் சுற்றும் தன்மையை உடையது.ஆக இந்த இராகு எனும் அசுரனை பற்றியும் கேது எனும் தேவனை பற்றியும் முழுமையாக அறியும் வரை காத்திருப்போம்...

- கோகுல மணிகண்டன் சான்றார்

தொடர்பு எண்: 09677359474



# வீண் விளம்பரம் வேண்டாம்

பத்து ரூபாய் பொருளை ஏழைகளுக்கு கொடுக்க, நூறு ரூபாய் செலவு செய்து விளம்பரப்படுத்தி, ஊரறிய கொடுக்கும் பழக்கம் தற்போது பெருகிவருகிறது.

அரசியலில் ஆரம்பித்த இந்த தீய பழக்கம் தற்போது சாதாரண மனிதனையும் விட்டுவைக்காமல் ஆட்டுவித்துக் கொண் டிருக்கின்றன.

பள்ளி குழந்தைகளுக்கு 10 ரூபாய் மதிப்பிலான பென்சில், ரப்பர், பேனா போன்ற பொருட்களை 30 குழந்தைகளுக்கு கொடுக்க 10ஆயிரம் ரூபாய் செலவு செய்து மேடை போட்டு, மீடியாவை வரவழைத்து, ஒருசில ஜால்ரா கூட்டத்தினர் மத்தியில் அந்த குழந்தைகளை கால்கடுக்க நிற்கவைத்து, போட்டோவுக்கு போஸ்கொடுத்து, அலப்பறை செய்வதில் எந்த வித பலனும் இல்லை என்று நம் முன்னோர்கள் முன்பே சொல்லியுள்ளனர்.

அதைப்பற்றி பார்ப்போம்...

சொல்வதனால் குறைந்து போகும் பொருள்கள் இரண்டுண்டு, அவை: **புண்ணியமும், பாவமுமாகும் ஆகும்.**

**நீ செய்த புண்ணியங்களை, தருமங்களை - நீயே எடுத்து சொல்வதனால் புண்ணியம் குறையும்.**

**நீ செய்த பாவங்களை நீயே பிறரிடம் கூறுவதனால் பாவம் குறையும்.**

குறைய வேண்டியது பாவம்; நிறைய வேண்டியது புண்ணியம்.

ஆதலினால் நீ செய்த புண்ணியத்தை விளம்பரப்படுத்தி கூறாதே; செய்த பாவத்தை மனம் வருந்தி மற்றவரிடம் கூறு.

# மாயையிலிருந்து விடுபட இறைவனிடத்தில் விழித்தெழுங்கள்



பூஜ்ய குருதேவர் அருளுகிறார்: "இறைவனை அதிகம் சார்ந்திருங்கள். இதுதான் மிகச்சிறந்த முறை. இறைவனின் சக்தி மிக உயர்வானது. அவனுடைய குணப்படுத்தும் திறனைப் பெறுவதற்கு மிகச் சிறந்த திறவுகோல், அந்த எல்லையற்ற சக்தியிடம் நம்பிக்கை வைப்பதாகும். அதே சமயம் உங்கள் சரீரம் ஒரு கனவென்று உணர்ந்து, அதற்கு அதிக கவனம் செலுத்த வேண்டாம். எதற்கு அதைப்பற்றி அளவுக்கதிகமாக அக்கறை காட்டவேண்டும்? சரீரத்தைப்பற்றி நியாயமான அக்கறை எடுத்துக்கொண்டு, பின்னர் அதைப் பற்றி நினைக்காதீர்கள். "சரீரத்தைப்பற்றி அக்கறைகொள்ள வேண்டாம்" என மகான்கள் கூறியுள்ளனர். அவர்கள் குறிப்பிடுவது என்னவென்றால், இறைவனைப்பற்றி இடைவிடாது விழிப்புடன் இருங்கள்உங்கள் மனதை அவன் மீது வைத்திருங்கள்அதனால் இவ்வுலகம் அவனது கனவு என்பதை அவன் உங்களுக்குக் காண்பிக்க நேரும். நியாயமாகவும், அறிவு பூர்வமாகவும் சரீரத்தை மறுக்காமல், இறைவன் நினைவிலேயே வாழ்ந்தீர்களானால் நீங்கள் வற்புறுத்த அஞ்சும் அந்த பலவீனமான சரீரம் அவனுடைய எண்ணக்கருத்தே என்பதும் நீங்கள் அச்சமுறுவதற்கு ஒன்றுமே இல்லை என்பதும், உங்களுக்குத் தெரியவரும். இதுதான் பரிபூரண நிலை".

"பெரும்பாலானோருக்கு அவர்களுடைய கர்மவினையின் குறிப்புரை மிகவும் வலிமையாக இருப்பதால் இந்த இறை தத்துவத்தை அவர்களால் புரிந்துகொள்ளமுடியாது. ஆனால் எண்ணிப்பாருங்கள், எத்தனைமுறை ஸ்தூல சரீரத்துடன் இவ்வுலகில் பிறந்திருப்பீர்கள். மேலும் எத்தனைமுறை தீயப்பழக்கங்களை உண்டாக்கி அவற்றை வென்றிருப்பீர்கள்; எத்தனை முறை மகிழ்ச்சியையும் துக்கத்தையும் இன்பத்தையும் நோயையும் முதுமையையும் மரணத்தையும் அனுபவித்திருப்பீர்கள். நீங்கள் இந்த சுய மனோ வசியத்தில் எத்தனை காலம் தொடர்ந்து இருப்பீர்கள்? அதிலிருந்து வெளியே வாருங்கள். பகவான் கிருஷ்ணன் போதித்தார், "இத்துயரக்கடலிலிருந்து மீளுக. ஓ அர்ஜுனா! எவனுடைய ஆன்மா என்னை உறுதியாகப் பற்றிக் கொள்கின்றதோ, அவனை நான் வாழ்க்கையின் துயர மற்றும், மரணக்கடலிலிருந்து விரைவாக மீட்பேன். என்னை நீ பற்றிக் கொள்."

– (பகவத் கீதை அத்.12 ஸ்லோகம்.7)

67
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு
மேம்படுவதற்காக

ஒப்புயர்வற்ற இறைவனுடன் ஒன்றி, இருங்கள். இறைவனிடத்தில் விழித்தெழுங்கள். அவனில் நீங்கள் விழித்தெழுந்த உடனேயே அச்சம் என்பதே இருக்காது. ஒரு காலத்தில் மிகவும் உண்மையானதாக இருந்த இந்த உடல், இனிமேல் எனக்கு ஒரு பொருட்டல்ல. சில சமயங்களில் என் உடல் அசைவற்று, உயிரற்று கிடப்பதை நான் காண்கிறேன். நான் ஒரு கனவிற்குள் வேறொரு கனவைக் காண்கிறேன். இந்த உலகக் கனவிற்குள் இந்த இறந்த சரீரத்தின் கனவு. ஆனால் நான் என் உள்ளுக்குள் நோக்கி பரமாத்மாவைக் கண்டவுடன், எந்தக் கனவுமே இல்லை. இவையெல்லாம் உண்மையான அனுபவங்கள் என்பதை அறிந்து கொண்டேன்."

குருதேவர், "சரீரம் ஒரு கனவு என்று நினைக்கவேண்டும்; அதன்மீது அதிக கவனம் செலுத்த வேண்டாம். அனைவரும் இறைவனைச் சார்ந்திருங்கள். இறைவனிடத்தில் விழித்தெழுங்கள் என்று கூறுகிறார்.

ஆனால் இன்றைய காலத்தில் வாழும் மனிதர்கள் எப்படியிருக்கிறார்கள்? இன்றைய மனிதர்களுடைய கவனம் முழுவதும் சரீரத்தை பகிட்டாகவும் ஆடம்பரமாகவும் வைத்துக் கொள்வதில்தான் உள்ளது. இறைவனைச் சார்ந்திருப்பவர்கள் மிகவும் குறைவே. சரீரத்தையும் உடைமைகளையும் சார்ந்திருப்பவர்களும் அவற்றைப் பேணுபவர்களும்தான் இன்றைக்கு அதிகமாக உள்ளனர். குருவின் போதனைகளை கடைபிடிக்கும் இறை அன்பர்கள் இறைவனின் விதிகளை மீறமாட்டார்கள். அதிலும் சோதனைகள் வரும். அவற்றை நான் விரிவாக எழுத விரும்பவில்லை, இருப்பினும் சிலவற்றைக்கூற விரும்புகிறேன்.

இறைவன் தன்னுடைய பக்தனை தன்னுடன் இணைத்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணுகிறான்.

ஒருபக்தன் இறைவனுடன் இளணய தகுதி பெற்றுவிட்டால் அல்லதுதயாராகி விட்டால். அந்த பக்தனை இறைவன் சோதிக்கிறான். அந்த பக்தன் பெற்றிருக்கும் 'தகுதி' உண்மையா அல்லது பொய்யா என்பது பற்றி இறைவன் அறிய விரும்புகிறான். அதனால் பக்தனை அவன் சோதிக்க ஆரம்பிக்கிறான். அந்த சோதனைகள் அனைத்தும் இறைவனுடையதுதான்

என்பதை அந்த பக்தன் அறிவான். அதை எப்படி பக்தன் அறிவான் என்றால், பக்தனுடைய இறைபக்தி உண்மையாக இருந்தால் சோதனைகள் இறைவனுடையதுதான் என்ற உண்மையை இறைவனே பக்தனுக்கு உணர்த்துவான்.

ஆனால் அந்த பக்தன், தாம் இறைவனுடன் வைத்துள்ள பக்தி ‘உண்மையானது’ என்பதை இறைவன் நம்பும்படி பக்தன் நடந்துகொள்வான். எப்படியெனில் அவனை எப்படி சோதித்தாலும் அவன் தன் நிலையிலிருந்து ஒருக்காலும் மாற மாட்டான்.

தன் கொள்கையிலிருந்து சிறிதும் அசைய மாட்டான். எத்தனை முறை சோதித்தாலும் மாற மாட்டான். மாறாக அவன்,

“இறைவா! இது என்ன சோதனை? நீ இன்னும் என்னைப்பற்றி புரிந்து கொள்ள வில்லையா? நான் உன்னைப் பற்றி, ‘நீ சோதிப்பவன்தான்’ என்பதைப் புரிந்து கொண்டேன். போதும் என்மேலுள்ள உன் சோதனை; மேலும் தொடரவேண்டாம்; உன் கண்ணாமூச்சி விளையாட்டை இத்துடன் நிறுத்தி விடுவாய் இறைவா!”

என்று பக்தன்இறைவனிடத்தில் உண்மையான பக்தி வைத்திருப்பவன்கூறுவான். ஆனால் அவனை தன்னிடம் சேர்த்துக் கொள்ளும்வரை சோதனை தொடர்ந்து நடந்துகொண்டேயிருக்கும்.

உண்மையான பக்தனின் நிலை எப்படியிருக்கு

**“இன்றைய உலகில் மக்கள் பணம், பதவி, புகழ் என்று அலைகின்றனர். இவையெல்லாம் பதவியிலிருந்து ஓய்வு பெறும் வரையில்தான். அதன் பின்னர் ‘பதவி’ என்கிற அடையாளத்தையும் ‘புகழ்’ என்கிற மாயையும் எங்கேயும் கொண்டுசெல்ல முடியாது; கொண்டுசென்றாலும் செல்லாது. பதவியும் புகழும் எல்லாம் தற்காலிகமான ஓர் அடையாளமே! அனைத்திற்கும் மேலான புகழ் இறைவனைக் கண்டடைவதில்தான் உள்ளது”**



மென்றால் பக்தனை தன்னிடம் இணைத்துக் கொள்வதற்காகவே அவனுடைய கர்ம வினைகளை தீர்த்து பரிசுத்தமாக்குவான் இறைவன். அதற்காக இறை அனுபூதி பெற்ற குருவை அனுப்பிவைப்பான். அவன் பக்தனுக்குத் தெரியாமலேயே அவனுடைய மீதமுள்ள கர்ம வினைகளையும் அறவே துடைத்து விடுவான்.

அதற்குக் காரணம் என்னவென்றால் அந்த பக்தன் இறைவனை முழுமையாக நேசிக்கிறான்; அவனிடத்தில் விசுவாசம் கொள்கிறான்.

அவன் எவ்வாறான விதத்தில் இறைவனிடம் அன்பு வைத்திருக்கிறான் என்பதை வார்த்தைகளால் கூற இயலாது. அது அந்த பக்தனுக்கும் இறைவனுக்கும் மட்டும்தான் தெரியும். இந் நிலையிலிருக்கும் அந்த பக்தன் எதற்கும் பயப்படமாட்டான்.

மேலேகூறப்பட்டவாறான இறை பக்தன், தன்னுடைய பணிகளுக்கிடையிலும், உண்ணும் போதும் உறங்கும்போதும் இறை நினைவிலேயே இருப்பான். அவனுக்கு தன் சரீரத்தைப்பற்றியுள்ள சிந்தனையோ கவலையோ இருக்காது. அவன் எப்பொழுதும் இறைவனுடனேயே வாழுவான் என்று கூறுவதை விட இறைவன் அவனுடன் இருப்பான் என்று கூறுவதே சிறப்பாகும். நாளடைவில் இறைவனே அந்த எண்ணத்தை அதிகரித்தருள்கிறான்.

இன்றைய உலகில் மக்கள் பணம், பதவி, புகழ் என்று அலைகின்றனர். இவையெல்லாம் பதவியிலிருந்து ஓய்வு பெறும் வரையில்தான். அதன் பின்னர் ‘பதவி’ என்கிற அடையாளத்தையும் ‘புகழ்’ என்கிற மாயையும் எங்கேயும் கொண்டு செல்ல முடியாது; கொண்டு சென்றாலும் செல்லாது. இறைவன் அருளிய பதவியை சேவைக்காக பயன்படுத்துவதே சாலச்சிறந்தது.

அதைத்தான் இறைவன் விரும்புகிறான். பதவியும் புகழும் எல்லாம் தற்காலிகமான ஓர் அடையாளமே! அனைத்திற்கும் மேலான புகழ் இறைவனைக் கண்டடைவதில்தான் உள்ளது. அந்தப் பதவியும் புகழும் மட்டும் என்றென்றும் நீடித்திருக்கும். இறைவனின் அருளால் மட்டும் தான் அது நடக்கும். அது எப்பொழுதும் நிலைத்திருக்கும். நீடித்த அடையாளமாக இருப்பது அந்தப்பதவிதான். நாம் இந்த உலகத்தைவிட்டுச் சென்றாலும் அந்த நிலை என்றும் நிலைத்திருக்கும்; இறைவனில்!

இறைவனின் அனுபூதியையும் இவ்வுலகையும் உலகப்பொருட்களையும் வைத்து ஒவ்வொருவரும் ஒத்துப்பார்க்க வேண்டும். இவற்றில் எது மேன்மையானது அல்லது நம் ஆன்மாவை இறைவனுடன் இணைப்பதற்கு எது வல்லது என்பது தெரிய வரும். அதன்பிறகு அவ்வழியை கடைபிடிக்க வேண்டும். இவ்வாறு எது சிறந்தது என்று கண்டறிந்து, தன்னை ஆராய்ந்து (சுய ஆராய்வு) இறைவனை அடைய வேண்டுமென்ற ஒரு குறிக்கோளுடன் வைராக்கியமாக இருக்க வேண்டும். அவனைத் தேடுபவர்களுக்கு மறைமுகமாகவும் நேரடியாகவும் எண்ணற்ற சோதனைகள் வந்துகொண்டேயிருக்கும்.

அதைப்பற்றிக் கவலைப்படாமல்கடந்து சென்றுகொண்டேயிருப்பான். உண்மையான இறைபக்தன், அவன் தன்பணிகளுக்கிடையிலும், “இறைவா! நான் உன்குழந்தை! என்னை நீ கைவிடமாட்டாய் என்றஉறுதியான நம்பிக்கையுடன் உன்னில் விசுவாசமாகஇருக்கிறேன்; என்னையும், எனக்கு நீ இப்பிறவியில் அளித்துள்ள உடைமைகளையும் முழுவதையுமே நான் உன்னிடத்தில் சமர்ப்பணம் செய்துள்ளதால், நீ தான் எனக்கு பொறுப்பாளி. எனக்கு என்ன செய்ய வேண்டுமோ அதை நீ உன் திருவுள்ளப்படியே செய்வாயாக!” என்று கூறிக்கொண்டேயிருப்பான்.

அவன் மனதில் என்னென்ன தோன்றுகிறதோ அவற்றையெல்லாம் இறைவனிடத்தில் சமர்ப்பித்துக் கொண்டேயிருப்பான்.

இவ்வாறான பக்தன், பூஜ்ய குருதேவர் அருளியவாறு எப்பொழுதும் இறைவனிடத்தில் விழித்தெழுந்தவாறு வாழ்வான். அவனுக்கு சரீர உணர்ச்சி என்பது துளியும் இருக்காது. அனைத்துமே இறைவன் மட்டும்தான் என்று உறுதி பூர்வமாக வாழ்வான். இப்படிப்பட்ட ஒரு பக்தன், அவன் எதிர்பாராமலே ஒரு நாள் முழுப்பிரபஞ்சத்தைத் தாங்கி நிற்கும் இறைவன் அவனுடைய குறிக்கோளை நிறைவேற்றுவான். பக்தனை இறைவன் தன்னுடன் சேர்த்துக்கொள்வான் என்பது பொருள். மேலே கூறிய பக்தன்போல் இறைவனின் குழந்தைகளாகின்ற நாம் அனைவரும் குருதேவரின் உன்னதமான போதனைகளை ஏற்றுக்கொண்டு இறைவன்மேல் விசுவாசம்கொள்ளவேண்டும் என்பது நம் அனைவருடைய கடமையாகும்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி)
சர்பதிவாளர் (ஓய்வு) Cell No.9894595909

நமது இதழில் எழுத விருப்பமா?
தாங்கள் அறிந்த ஆன்மிக செய்திகள், சென்றுவந்த திருத்தலங்கள், புராண இதிகாச கதைகள், தத்துவங்கள், இயற்கை மருத்துவம் போன்றவற்றை தெளிவாக டைப் செய்து பெயர், போன் எண்ணுடன் எங்களுக்கு அனுப்பி வையுங்கள், அவற்றின் உண்மைத் தன்மைக்கு ஏற்ப நமது இதழில் பிரசுரிக்கிறோம்.
தகவல்களை அனுப்பவேண்டிய மெயில் முகவரி
aanmeegamalar1@gmil.com
aanmeegamalar2@gmil.com
தொடர்பு கொள்ளவும்
08825844033

# தேவி பூஜை சம்பந்தமான சில சாதாரண காரியங்கள் மற்றும் அவற்றின் சாஸ்திரம்!

தேவி பூஜை செய்வதற்கு முன்னால் தேவி தத்துவ சம்பந்தமான கோலத்தைப் போட வேண்டும்.

முக்கியமாக செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் தேவி பூஜைக்கு முன்னால் மற்றும் நவராத்திரி சமயத்தில் வீட்டு வாயிலிலும் பூஜை அறையிலும் தேவி தத்துவத்தை ஆகர்ஷிக்கும் மற்றும் வெளிப்படுத்தும் ஸாத்வீக கோலங்களைப் போட வேண்டும்.

ஸ்ரீ துர்காதேவி தத்துவத்தை ஆகர்ஷித்து வெளியிடும் சில கோலங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. எல்லா தேவிகளும் ஆதிசக்தி ஸ்ரீ துர்காதேவியின் பலவித ரூபங்கள், ஆதலால் அந்தந்த தேவியின் உபாஸனை செய்யும்போது ஸ்ரீ துர்காதேவி தத்துவ சம்பந்தமுடைய கோலத்தைப் போடவும். இந்த கோலத்தைப் போடுவதால் சூழல் தேவி தத்துவத்தால் நிறைந்து அதன் மூலம் பலன் கிடைக்கிறது. இந்த கோலத்தை, மஞ்சள், நீலம், ரோஸ் போன்ற ஸாத்வீக நிறங்களால் நிரப்புங்கள்.

**சைதன்ய அனுபூதியை வழங்கும் கோலம்**



நடுபுள்ளியிலிருந்து எட்டு திசைகளில் 5 புள்ளிகள் வைக்க வேண்டும். புள்ளி ஒன்றிலிருந்து துவங்கி 3, 5, 2, 4 வரை இணைத்து திரும்பவும் ஒன்றில் வந்து முடிக்க வேண்டும்.

**பக்தியுணர்வை அதிகரிக்க உதவும் கோலம்**



14 புள்ளி; 14 வரிசை

**பூஜையறை, மணைகளில் போட உதவும் கோலங்கள்**



17 புள்ளி : 3 வரிசை; 1916 புள்ளிகள்

– மேலும் விவரங்களுக்கு:
hindujagruti தொ.எண்: 9380949626

## தேவியின் தத்துவத்தை ஆகர்ஷித்து வெளியிடும் வடிவமைப்பு

சில வடிவமைப்புகள் தேவி தத்துவத்தை ஆகர் ஷித்து வெளியிட உதவுகின்றன. அத்தகைய ஒரு வடிவமைப்பு இங்கே கொடுக்கப் பட்டுள்ளது. இந்த வடிவமைப்பு கோலத்தை, தேவிக்கு முன்பாக செய்யும் அலங்காரத்தில், தோரணத்தில் உபயோகப்படுத்துவதால் தேவி தத்துவத்தின் அதிகபட்ச பலன் கிடைக்கிறது.



## சிந்தனைத் துளிகள்



உலகத்திலே நீ இரு. ஆனால் உலகம் உன்னிடத்தில் இருக்கக்கூடாது.
குடும்பத்தில் நீ இரு. ஆனால், குடும்பம் உன்னிடத்தில் இருக்கக்கூடாது.
உலகமும் குடும்பமும் உள்ளத்தில் புகுந்தால் நீ அழுந்திவிடுவாய்.
வண்டிமேல் நீ ஏறு;
வண்டி உன்மேல் ஏறக்கூடாது.
கப்பல் கடலில் இருக்க வேண்டும், கடல் கப்பலில் புகக்கூடாது.
கடல் நீர் கப்பலில் புகுந்தால் கப்பல் அழிந்திவிடும்.

நீ இறைவனுடைய கருனையைப் பெற வேண்டுமானால் அதற்கு வழி ஒன்று உண்டு.
அது வெறும் வணக்கமும் வழிபாடும் மட்டுமன்று.
துன்பமுற்றுத் துடிக்கிற உயிர்களிடம் நீ கருனை செய்.
அவற்றின் துன்பத்தை நீக்கு.
நீ பிற உயிர்களிடம் கருனை செய்தால் கடவுள் உன்னிடம் கருனை செய்வார்.
கருணையால் கருணையைப் பெறலாம்.

யாசித்து, நெய்யும் பாலும் தயிரும் சேர்த்து சிறந்த அன்னதை உண்பதைவிட, உழைத்து உண்ணும் தண்ணீரும் சோரும் சிறந்தது.
வீரமும் புகழுமில்லாமல் மங்கி நெடுங்காலம் இருப்பதைவிட, வீரமும் புகழும் பெற்றுச் சிறிது காலம் வாழ்வது சிறந்தது.
உமிக் குவியல் நெடுநேரம் காய்ந்துக் கருகவதைவிட, தைலமுள்ள மரம் ஜொலித்துச் சிறிது நேரம் எரிவது சிறந்தது.

# கனவில் வந்து தங்கிய பைரவர்



திருவாரூர் மாவட்டம், பஞ்சாட்சரபுரம் என்கின்ற கொரடாச்சேரியில் அமைந்துள்ள ஸ்ரீ காலபைரவ ஆசிரமத்தில் மாதம் தோறும் தேய்பிறை அஷ்டமி பூஜை யாகம் மிகவும் சிறப்பாக நடைப்பெற்றுகொண்டு இருந்தது, அந்த பைரவரை தரிசிக்க காசியிலிருந்துவந்த அகோரி சுவாமிகள் மற்றும் பக்தர் களின் வேண்டுகோளுக்கினங்க, ஸ்ரீ கால பைரவாஸ்ரமத்தில் ஸ்வர்ண பைரவர் பிரதிஷ்டடை செய்ய முடிவெடுக்கப்பட்டு மகாபலிபுரத்தில் சிலை விக்கிரகம் வாங்க டிரஸ்ட் நிர்வாகத்தினர் மகாபலிபுரம் சென்றோம்.

பைரவர் சிலை வாங்கி மதுரவாயல், ஸ்ரீ ஸ்வர்ண பைரவர் சாரிடபிள் டிரஸ்ட் அலுவலகத்தில் வைக்கப்பட்டது.

பிறகு பைரவர் காசிக்கு சென்று கங்கையில் ஜலவாச பூஜை செய்வதற்காக பைரவர் சிலையை சென்ட்ரல் ரயில் நிலையத்திற்க்கு கொண்டு சென்றோம். அதனை தொடர்ந்து ஸ்ரீ ஸ்வர்ண பைரவர் கங்கையில் ஜல வாச பூஜையை, சிவாச்சாரியார்கள், மகான்கள் மற்றும் அகோரிகள் சிறப்பாக பூஜை செய்து முடித்தோம்.

பின் அங்கிருந்து சென்னைக்கு விக்ரகம் கொண்டுவரும் பணி துவங்கியது.

ஒரு வாரம் கழித்து பைரவர் சிலை மதுரவாயல் ஸ்ரீ ஸ்வர்ண பைரவர் டிரஸ்ட் அலுவலகத்திற்கு கொண்டு வரப்பட்டு 48 தினம் சுவாமியை பூஜை செய்ய ஏற்பாடு செய்தபோது. டிரஸ்ட் அலுவலகத்தில் இடம் போதாவில்லை.

பலர் பைரவர் பூஜைக்கு இடம் தருவதாக கூறினர். ஒரு நாள் முழுவதும் யோசனை செய்தோம். ஸ்ரீ ஸ்வர்ண பைரவர் ஒருவர் இடத்தில் மட்டும் வைத்து பூஜை செய்தால், மற்றவர்கள் சுவாமி எங்கள் இல்லத்தில் வரவில்லையே என்று மன சங்கடம் படுவார்கள், ஆகையால் பைரவரை நாளை காலை கொரடாச்சேரி ஸ்ரீ கால பைரவா சிரமத்திற்க்கு எடுத்து சென்று அங்கே 48 நாள் பூஜை செய்யலாம் என்று முடிவெடுத்தோம்.

இரவில் பைரவரை மனதார வேண்டிக் கொண்டு படுக்க சென்றேன் மறுநாள் அதிகாலை 4.15 மணியளவில் கனவில் சிறிய குழந்தை வடிவில் வந்து நான் இங்கேதான் இருக்க போகிறேன் எல்லோருக்கும் நன்மை செய்வதற்காக இங்கு இருக்கிறேன் ஏன் என்னை எடுத்து செல்ல முயற்சி செய்கிறாய் என்று சொல்ல, நீ யார் என்று நான் கேட்க,





என்னை தெரியவில்லையா என்று சொல்லி அந்த குழந்தை பைரவரின் அருகில் சென்று மறைந்தது, உடனே பைரவர் அலுவலகத்தில் பைரவர் பிரதிஷ்டை செய்ய பைரவரின் கட்டளை படி முடிவு செய்தோம்.

அதனை தொடர்ந்து கொரடாச்சேரியில் மற்றொரு ஸ்வர்ண பைரவரை திருமதி.சரஸ்வதி சுரேஷ்பாபு அவர்களின் பங்களிப்புடன் பிரதிஷ்டை செய்தோம்.

கனவில் தோன்றி மறைந்த பைரவரை மதுரவாயல் ஸ்ரீ ஸ்வர்ண பைரவர் சாரிடபிள் டிரஸ்ட்டில் வைத்து தற்போது பூஜைகள் நடைபெற்று வருகிறது பக்தர்களின் வேண்டுதலை நிறைவேற்றி தருவதால் வாணகரம் பைரவரின் புகழ் தற்போது பரவிக்கொண்டிருக்கிறது.

மேலும் விவரங்களுக்கு:
ஸ்ரீ ஸ்வர்ண பைரவர் சாரிடபிள் டிரஸ்ட்,
தொடர்புக்கு: Cell:9444491217

மனிதனிடம் உள்ள அழுக்கு மூன்று வகையாகப் பிரிக்கலாம் இந்த மூன்று வகை அழுக்கை நீக்கினால்தான் மனிதன் இறைநிலையின் முதல் படியில் காலடி எடுத்து வைப்பான், சாதாரண மனிதனாக இருக்கும் போது இந்த 3 விதமான அழுக்கில் உழலுவான் தெய்வ சிந்தனை வரும்போது இந்த அழுக்கை சேர்த்து வைத்தால் நல்ல பலன் கிடைக்காது. அவ்வாறான அழுக்கையும், அதை நீக்கும் முறையையும் பார்ப்போம்.

### 1. மன அழுக்கு

அவை: பொறாமை, ஆசை, கோபம், பகை என்பன.

இந்த மன அழுக்கைத் ‘தியானம்’ என்ற நீரால் கழுவுக.

### 2.வாயழுக்கு

அவை: பொய், புறங்கூறல், தீச்சொல் என்பன.

இந்த வாயழுக்கைத் ‘துதி’ என்னும் நீரால் கழுவுக.

### 3.மெய்யழுக்கு.

அவை: கொலை, புலை, பிறன்மனை நயத்தல், களவு முதலியன.

இந்த மெய்யழுக்கை ‘அர்ச்சனை’ என்னும் நீரால் கழுவுக.

## சிந்தனைத் துளிகள்

புலன்களை வென்றவனே வீரன்.

இறைவனுடைய இலக்கணங்களை உணர்ந்தவனே ஞானி.

துன்பங்களைப் பொறுப்பவனே தவசி.

விருந்தினருக்கென்று வாழ்பவனே இல்லறத்தான்.

அறஞ் செய்ய வாய்ப்பு இல்லாதபோது இறந்தவனே இருந்தவன்.

கொடுக்காமல் பொருளைத் திரட்டி வாழ்பவனே இறந்தவன்.



நாவுக்கு அடிமையாகாதே! ‘நல்லுணவு எங்கே? எங்கே?

என்று தேடி ஏங்காதே. இறைவனருளால் கிடைத்ததை உண்டு திருப்தியடை.

நாவுக்கு அடிமையானால் உனது நல் குறையும்.
மீன் சதா உணவாசையினால் ஒழியாமல் தண்ணீரில், உலாவுகிறது, ஒருசமயம் உணவாசையால் தூண்டிலில் பட்டு இறந்துவிடுகிறது.




ஆசிரியர், வெளியீட்டாளர்

C.N.ராஜா

செல்: 8825844033

•••

இணை ஆசிரியர்

முருகன் செல்: 7338881773

•••

துணை ஆசிரியர்கள்

ஷியாம்சுந்தர்,

சஞ்சனா, ஸ்ரீபதி,

குருபிரியா செல்: 9894595909

புனிதவேல் செல்: 9841807572

•••

வடிவமைப்பு

பான்ராஜாகிராபிக்ஸ்

செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்

aanmeegamalar.com

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.

08825844033



ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்

08825844033




# குழந்தை பருவத்தில் உலகத்திலுள்ள எல்லா குழந்தைகளுமே ஒழுங்காய் இருக்கின்றன

❖ சுதந்திரம் என்பதே ஒவ்வொரு ஆண் பெண் இவர்களின் விளையாட்டாகும். அவர்கள் இதிலே உள்ள சட்டதிட்டங்களையும் வழிமுறைகளையும் நன்றாகத் தெரிந்து கொண்டு விளையாட வேண்டும். சட்ட திட்டங்கள் இல்லாத சுதந்திரக்கருத்தே இல்லை.

❖ சட்ட திட்டங்கள் இல்லாத எந்த ஒரு விளையாட்டும் உலகில் இல்லை. அப்படி இருந்தால் சுதந்திரம் என்ற வார்த்தைக்கு பொருளே இல்லாமல் போய்விடும்.

❖ இந்தியாவின் மிக வலிமையான சகாப்தம் இந்திய விடுதலைப் போராட்டமே. அதனது மத்தியில் பல துன்பங்களும் பல்வேறு வித மான ஒடுக்கப்பட்ட தன்மைகளும் துன்புறுத்தும் நிலைகளும் உள்ளே இருந்தன. ஆயினும் நமது சுதந்திரம் அழகாக வெற்றி பெற்றுவிட்டது. இதற்காக நாம் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு நன்றி சொல்லுதல் வேண்டும்.

❖ ஒரு தனிமனுதனுடைய சுதந்திரம் என்பது அவனு டைய ஒழுங்குமுறையிலும் ஒழுக்கத்திலும் வேர் போன்று வைக்கப் பட்டிருக்கிறது. இதைக் கருத்தில் கொள். மேற்சொன்ன சுதந்திரத்தை அரைகுறையாக நிறைவேற்ற சிந்தித்துவிடாதே.

❖ ஒரு உலோகப் பாத்திரத்தையும் ஒரு இரும்புத் தகட்டையும் உஷ்ணத்துடன் காய்ச்சுவது மிகச்சுலபம். ஆனால் உலகமக்களைப் பாடுபட்டு உழையுங்கள் என்று சொல்லுவது மிகவும் கடினம்.

❖ குழந்தை பருவத்தில் உலகத்திலுள்ள எல்லா குழந்தைகளுமே ஒழுங்காய் இருக்கின்றன. அவர்களது பருவ காலத்தில் அவர்கள் தானாகவே உழைக்கிறார்கள். இதனால் ஒரு நாட்டிற்கு இளைஞர்களை வகைப்படுத்துகின்ற வேலை ஒரு தொல்லையே அல்ல.

❖ எனது மூதாதையர்கள் எனக்கும் எனது நாட்டிற்கும் சுதந் திரத்தை வழங்கி விட்டார்கள். அதை உணருவதே எனது வேலையும் முயற்சியும் ஆகும்.

❖ அக்கிரமங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக நாட்டில் நடக்கின்றன. இது ஒரு முக்கியமான தொழில் அல்ல. வேலையற்ற வெட்டியான வீணர்களே இதை முன் நின்றும் அல்லது பின் இருந்தும் நிகழ்த்துகிறார்கள்.



ஞானச்சேரி ஞானிகள்

பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின் அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு எஸ்.மகாதேவன், போன் 098410 28028


ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்

புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்

# குளிக்கும் போது அவசியம் கடைபிடிக்க வேண்டிய செயல்கள்

- மோதிர விரலால் "ஓம்" என்று எழுதுங்கள். குளிக்கும் போது நிகழும் "அதிசயத்தை" பாருங்கள்.!
- குளிக்கும் போது ஒரு சில விதிமுறைகளை நாம் பின்பற்ற வேண்டும் என்பது ஐதீகம்.
- குளிக்கும் போது வடக்கு அல்லது கிழக்கு திசை நோக்கி நின்று குளிக்க வேண்டும்.
- கர்மம் செய்த பின்னும், மயானத்திற்கு சென்று வந்தால் மட்டும் தெற்கு நோக்கி நின்று குளிக்கலாம்.
- மேற்கு திசை நோக்கி நின்று குளித்தால் உடல் நோவு வரும்.
- தினமும் கங்கா ஸ்நானம் செய்ய முடியும்.
- குளிக்கும் முன் ஒரு குவளை தண்ணீரில் மோதிர விரலால் ஓம் என்று தியானம் செய்து எழுதுங்கள்.
- அந்த நீர் அப்போது முதல் கங்கை நீராக மாறிவிடும். ஒரு நிமிட தியானத்தில் "இந்த உடலுக்குள் நீங்களே வந்திருந்து, இதை உங்களுக்கு செய்யும் அபிஷேகமாக ஏற்று கொள்ளுங்கள்" என்று இறையிடம் வேண்டி கொண்டு குளித்தால், உள்பூசையின் அங்கமாக இறைவனுக்கு அபிஷேகமும் ஆகிவிடும்.
- அக்னி எப்போதும் மேல்நோக்கியே பயணிக்கும்.
- உடலுக்குள் இருக்கும் அக்னி கீழிருந்து மேல் ஏறுவதுதான் சரி.
- தண்ணீரை கால் முதல் மேல் நோக்கி நனைத்து வந்து கடைசியில் தலையில் ஊற்றி கொள்ள வேண்டும்.
- நமது மண்டை ஓடுக்கு எப்படிப்பட்ட அக்னியின் வேகத்தையும் தாங்குகிற சக்தி உண்டு.
- காலில் இருந்து பரவும் குளிர்ச்சி மேல் நோக்கி பயணிக்கும் போது உள் அக்னியானது தலையை நோக்கி பயணிக்கும். அதுவே சரியான முறை.
- தலை முதல் கால் வரை உள்ள பின் பாகத்தை "பிரஷ்டம்" என்பர்.
- அதில் நம் முதுகு பாகம் தான் மிகப்பெரியது. அங்கு தான் அக்னியின் வீச்சம் கூடுதல் வேகமாக பரவும்.
- ஆதலால், குளித்து முடித்தவுடன், முதலில் முதுகு பாகத்தைதான் துவட்ட வேண்டும்.
- குளிக்கும் நீரிலே டவலை நனைத்து பிழிந்து துவட்டுவது தான் உத்தமம்.
- அனேகமாக, அனைவரும் ஈரம் படாத துண்டைத்தான் உபயோகிப்பீர்கள்.
- உலர்ந்த துணியானது உள் சூட்டை வேகமாக பரவ செய்து பல வித உள் நோவுகளை உருவாக்கும்.
- பிறருடன் வாய் திறந்து பேச கூடாத மூன்று நேரங்களில் ஒன்று குளிக்கும் நேரம்.
- மௌனத்தை கடைபிடிக்கலாம், அல்லது மனதளவில் தெரிந்த ஜெபத்தை செய்யலாம்.
- குளிப்பதினால், பஞ்ச இந்த்ரியகளால் செய்த தவறுகளினால் நமக்குள் சேர்த்து வைத்துள்ள கர்மாக்கள் களைய பெறுகிறது.
- குளிக்கும் போது, வாயில் கொள்ளளவு நீரை வைத்து குளித்தபின் துப்புவதால், கண்டத்துக்குமேல் (கழுத்துக்கு) வருகிற நீர் சம்பந்தமான கட்டுகளை, நோய்களை தவிர்க்கலாம்.
- வாயில் இருக்கும் நீர் மேல் நோக்கி எழும்பும் அக்னியின் வேகத்தை எடுத்துவிடும்.
- நீர் நிலைகள், குளம், ஆறு, கடல் இவைகளில் எல்லா தேவதைகளும், பெரியவர்களும் அரூபமாக ஸ்நானம் செய்வதாக கூறுகிறார்கள்.
- நாரம் என்கிற தண்ணீரில் நாராயணன் வாசம் செய்வதாகவும் சொல்வார்கள்.
- ஆதலால், ஓடி சென்று அதில் குதிக்காமல், கரையில் நின்று, சிறிது நீரை எடுத்து தலையில் தெளித்தபின், நீர் கலங்காமல், ஒரு இலை நீரில் விழுகிற வேகத்தில் மெதுவாக இறங்கி சென்று குளிக்க வேண்டும்.
- நீரில் காரி உமிழ்வதோ, துப்புவதோ கூடாது.
- நீரின்றி ஒரு உயிரும் இல்லை.நீரை விரயம் செய்ய கடன் அதிகரிக்கும்.
- உப்பு நீர் ஸ்நானம் திருஷ்டி தோஷங்களை அறுக்கும்.
- மேற்குறிப்பிட்ட அனைத்தும் குளிக்கும் போது நாம் பயன்படுத்த கூடிய நல்ல முறைகள் என்பது குறிப்பிடத் தக்கது.



## ஐந்துவிதமான பலனை தரும்

# பஞ்சமுக ஆஞ்சநேயர்

ஒரு முறை ராமருக்கும், ராவணனுக்கும் போர் நடந்தது. இதில் ராவணன் நிராயுதபாணியானான். இதனால் ராமர் ராவணனை கொல்ல மனமின்றி,”இன்று போய் நாளை வா’ என திருப்பி அனுப்பிவிட்டார். ராமர் இவ்வாறு செய்தது தன்னை திருத்துவதற்குத்தான் என்பதை ராவணன் உணரவில்லை. மீண்டும் ராமருடன் போர் செய்ய நினைத்த ராவணன், “மயில் ராவணன்’ என்ற மற்றொரு அசுரனது துணையுடன் போருக்கு கிளம்பினான். ராமரை அழிப்பதற்காக மயில் ராவணன் கொடிய யாகத்தை நடத்த திட்டமிட்டான்.

இந்த யாகம் நடந்தால் ராமலட்சுமணனின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்பதை உணர்ந்த விபீஷணன், யாகத்தை தடுத்து நிறுத்த ஆஞ்சநேயரை அனுப்பும்படி ராமரிடம் கூறினான். ராமர் கூறியதன் பேரில் ஆஞ்சநேயர் யாகத்தை தடுத்து நிறுத்த கிளம்பும் முன் நரசிம்மர், ஹயக்கிரீவர், வராகர், கருடன், ஆகியோரை வணங்கி ஆசி பெற்றார்.இந்த தெய்வங்கள் அனைவரும் போரில் அனுமன் வெற்றிபெற தங்களின் உருவ வடிவின் சக்தியை அனுமனுக்கு அளித்தனர்.

இதன்மூலம் ஆஞ்சநேயர் பஞ்சமுகம் கொண்டு விஸ்வரூபம் எடுத்து மனித குல வாழ்விற்காக மயில் ராவணனை அழித்தார்.

இப்படி பஞ்ச முகத்தில் விசேஷ அவதாரம் எடுத்த தால், பக்தர்களின் தீர்க்க முடியாத குறைகளை தீர்த்து வைக்கும் அருளாற்றல் கொண்டவராக “பஞ்சமுக ஆஞ்சநேயர்’ விளங்குகிறார். அத்துடன் வெற்றியையும் வளத்தையும் குறிக்கும் வகையில் “ஜய மங்களா’ என்றும் அழைக்கப்படுகிறார்.

பஞ்சமுக ஆஞ்சநேயரை வழிபடுபவர்களுக்கு நரசிம்மரின் அருளால் எடுத்த காரியங்களில் வெற்றியும், லட்சுமி கடாட்சமும், ஹயக்கிரீவரின் அருளால் உண்மையான அறிவாற்றல், ஆன்மிக பலமும், வராகரின் அருளால் மனத்துணிவும், கருடனின் அருளால் அனைத்து விதமான நஞ்சின் ஆபத்து விலகும் தன்மையும், ஆஞ்சநேயரின் அருளால் மன அமைதியும், சகல சவுபாக்கியங்களும் கிடைக்கும் என்பது நம்பிக்கை.



தோஷம் நீக்கும் பஞ்சமுக ஆஞ்சநேயர் அனைத்து கோரிக்கைகளையும் ஈடேற்றக்கூடிய வல்லமை படைத்தவர் பஞ்சமுக ஆஞ்சநேயர். இவரது முகங்களான கருடமுகம் பிணி நீக்கும், வராகமுகம் செல்வம் அளிக்கும், அனுமன் முகம் சகல கிரகதோஷமும் போக்கி எல்லா நலமும் தரும், நரசிம்மமுகம் தீமையைப் போக்கும், ஹயக்ரீவர் முகம் கல்வியும், ஞானமும் தரும். பக்தர்கள் வேண்டியதை வேண்டியவாறு அருள்கிறார் பஞ்சமுக ஆஞ்சநேயர். இவரது தாடை நீண்டு இருக்கும். முகம், நரசிம்ம முகம், கருடன் முகம், வராஹ முகம், அனுமன் முகம், ஹயக்கிரீவர் முகம் என ஆஞ்சநேயர் ஐந்து முகவடிவில் ஒருங்கிணைந்து உள்ளார்.

கிழக்கு முகம் ஹனுமனாக சத்ருக்களை அழிக்க வந்த முகம் “பிரதிவாதி முகஸ்நம்பி’’ என்ற சுலோக வரியினால் அனுமனை வேண்டினால் எதிரிகள் விலகுவர் என பொருள் தரும். தெற்கு முகம் நரசிம்ம முகம். இம்முக ரூப ஆஞ்சனேயர் பயத்தினால் உண்டாகும் பிரச்சனைகள், பில்லி சூன்யம் துஷ்ட தேவதைகளால் உண்டாகும் பரயந்த்ர பரமந்த்ர தோஷங்களை போக்க அவதரித்த முகம். மேற்கு முகம் கருடன் முகத் தரிசனம் சரும நோய், விஷ நோய், ஊழ்வினை நோய்களை போக்கி அருள்தரும்.

வடக்கு முகம் வராஹமுகத் தரிசனம், தீராத கடன், பொருள் இழப்பு விஷ சுரம், மர்ம நோய்கள் முதலியனவற்றை அழித்து சாந்தியும், நிம்மதியும் தரவல்லது. பொருளாதார மேன்மை உண்டாகும். மேல் முகம் ஸ்ரீஹயக்கிரீவர் முகம். இம்முக ஆஞ்சநேயர் சகல கலைகளையும், சிறந்த ஞானத்தையும், சொல்வன்மையையும், சகல கலா வல்லவனாக தேர்ச்சியையும் தருபவர். அனுமனை பஞ்சமுக ஆஞ்ச நேயராக வழிபாடு செய்யும் போது உங்களுக்கும் சொல்வன்மை, ஆரோக்கியம், எதிரிகள் விலகல் என அனைத்தும் உண்டாகும்.

www.aanmeegamalar.com

www.aanmeegamalar.com

# மகான்களின் ஒவ்வொரு செயலுக்கும் ஒவ்வொரு அர்த்தம்

மகான்களின் ஒவ்வொரு செயலுக்கும் ஒவ்வொரு அர்த்தம் இருக்கும், இதை நிருபிக்கு வகையில் பெரியவா நிகழ்த்திய பல அதிசயங்களில், அன்பர் ஒருவர் பகிர்ந்து கொண்டதை பார்ப்போம்.

பல வருடங்களுக்கு முன் காஞ்சி மகா ஸ்வாமிகள், தன் பரிவாரங்களுடன் தஞ்சை மாவட்டப் பகுதிகளுக்கு விஜயம் செய்தார். அது, ஆனி மாதம். ஆடுதுறையில், பெரிய தர்மசத்திரம் ஒன்றில் முகாமிட்டிருந்த மகா பெரியவாளை, சுற்று வட்டார கிராமங்களைச் சேர்ந்த ஜனங்கள், வந்து தரிசித்துச் சென்றபடி இருந்தனர்.

ஆடுதுறையைச் சுற்றியுள்ள நடராஜபுரம், கோவிந்தபுரம், தியாகராஜபுரம், சாத்தனூர், திருமங்கலக்குடி ஆகிய ஊர்களைச் சேர்ந்த பிரமுகர்கள், தங்கள் ஊர் சார்பாக ஆச்சார் யாளுக்கு சமஷ்டி பிக்ஷா வந்தனம் (பல பேர் சேர்ந்து பிட்சை அளித்து வழிபடுவது) நடத்த ஏற்பாடு செய்திருந்தனர்.

ஆடுதுறையிலிருந்து தெற்கே சுமார் ஒரு கி.மீ. தொலைவில்தான் அடியேனின் சொந்த ஊரான மருத்துவக்குடி கிராமம் உள்ளது. என் தந்தையார் பிரம்ம சந்தான வாத்தியார், அப்போது அந்தப் பகுதியின் காஞ்சிமட முத்திராதிகாரியாக இருந்தார். எங்களது கிராமத்தின் சார்பாகவும் சமஷ்டி பிக்ஷா வந்தனம் நடத்த வேண்டும் என்று விரும்பினார் அவர். இதை, உள்ளூர் பிரமுகர்களும் ஏற்றுக் கொண்டனர்.

மறு நாள் காலை. ஸ்வாமிகள் முகாமிட்டிருந்த சத்திரத்துக்குக் கிளம்பினார் என் தகப்பனார். என்னையும் உடன் அழைத்துச் சென்றார்.

அவரைக் கண்டதும் மடத்துக் காரியஸ்தர், ‘‘சாஸ்திரிகளேஞ் நீங்க மருத்துவக்குடி பகுதி மடத்து முத்திராதிகாரிதானே? ஒரு நாளைக்கி உங்க ஊர் பிக்ஷை வெச்சுக்க வேண்டாமோ? வர்ற ஞாயித்துக்கிழமை உங்க ஊருல வெச்சுக்கோங்களேன்!” என்றார்.

உடனே என் தந்தையார், ‘‘நானும் அத கேட்டுண்டு போகத்தான் வந்தேன். ஞாயித்துக் கிழமையே வெச்சுண்டுடறோம். சுமாரா எவ்ளோ ரூவா செலவாகும்?” என்று அந்த காரியஸ்தரிடம் வினவினார்.

காரியஸ்தர் சிரித்தபடியே, ‘‘சொல்றேன் மடத்துக் காணிக்கையா இருநூத்தம்பது ரூவா கட்டிப்டணும். அப்புறம் தேங்கா, பழம், காய்கறிகள்னு நீங்க வாங்கிண்டு வர்ற செலவு. எல்லாம் முடிஞ்சு, ஆச்சார்யாள்ட்ட பிரசாதம் வாங்கிக்கறச்சே உங்க கிராம வசதிப்படி பாத சமர்ப்பணை (காணிக்கை) அப்டி இப்டினு ஐநூறு, அறுநூறு ரூவா செலவு புடிக்கும்! உங்க ஊர்ல வசூல் ஆயிடுமோல்லியோ?” என்று கேட்டார்.

சற்றும் தயங்காமல், ‘‘பேஷா ஆயிடும்” என்ற என் தகப் பனார், ‘‘அது சரி மத்த ஊர்க்காராள்லாம் பாத சமர்ப்பணையா எவ்ளவு பண்றா?” என்று ஆவலுடன் கேட்டார்.

‘‘ஐநூறுலேர்ந்து ஆயிரம் வரை பண்றா” என்றார் காரியஸ்தர். தகப்பனார் யோசனையில் ஆழ்ந்தார். சற்று நேரத்தில் ஆச்சார்யாளை தரிசித்த நாங்கள், அவரை நமஸ்கரித்து எழுந்தோம். என் தந்தையார் பிக்ஷா வந்தன விஷயத்தை ஸ்வாமிகளிடம் தெரிவித்தார்.

‘‘பேஷா நடக்கட்டுமே” என்று அனுக்கிரகித்த ஸ்வாமிகள், ‘‘ஏகதேசம் (தனியாக) பண்றாப்ல நம்மூர்ல நிறைய தனிகாள்லாம் (பணக்காரர்கள்) இருக் காளோ?” என்று வினவினார்.

உடனே என் தகப்பனார் குரலை தாழ்த்தி, ‘‘மூணு நாலு பேர்வழிகள் இருக்கா. அவாள்ள ரெண்டு மூணு



பேர், இப்போ மெட்ராஸ் போயி ருக்கா. ஊர்ல எல்லாருமா சேர்ந்துதான் பெரியவாளுக்கு பிக்ஷா வந்தனம் பண்றதா உத்தேசம். ஆச்சார்யாள் அனுக்கிரகிக்கணும்'' என வேண்டினார். புன்னகைத்தபடியே இரு கரங் களையும் தூக்கி ஆசீர்வதித்தார் ஸ்வாமிகள்.

ஞாயிற்றுக்கிழமைக்கு இன்னும் நான்கு நாட்களே இருந்தன. வசூலை ஆரம்பித்தார் தகப்பனார். மூன்று அக்ரஹாரத்திலும் சேர்த்து சுமார் 30 வீடுகள் இருக்கும். வியாழக் கிழமை மாலை வசூல் முடிந்தது. 400 ரூபாய் சேர்ந்தது. என் தகப்பனாரும் ஊரிலுள்ள மற்ற வைதீகர்களும் சேர்ந்து நூறு ரூபாய் சமர்ப் பித்தனர். ஆக, மொத்த வசூல் 500 ரூபாய்! பிக்ஷா வந்தன செலவுக்கு இது போதும்.

இனி, பெரியவாளின் பாத சமர்ப்பணைக் குத்தான் பணம் வேண்டும். 'ஐநூறு ரூபாயாவது பாத சமர்ப்பணை பண்ண வேண்டும்' என்பது என் தந்தையின் ஆசை. ஆனால் பணமில்லை. அன்றிரவு அவர், சரியாகவே தூங்கவில்லை.

வெள்ளிக்கிழமை! ஆச்சார்யாளைத் தரிசிக் கச் சென்றோம். சத்திரத்து வாயிலில் கீற்றுக் கொட்டகையில் அமர்ந்து தரிசனம் அளித்துக் கொண்டிருந்தார் ஸ்வாமிகள். கூட்டம் அலை மோதியது. நாங்கள், சற்றுத் தள்ளி ஓர் ஓரமாக ஸ்வாமிகள் இருந்த இடத்தை நோக்கி கை கூப்பி நின்றிருந்தோம். நான் தகப்பனாரை பார்த்தேன். முகத்தில் கவலை தோய்ந்திருந்தது. 'பாத சமர்ப்பணை ஐநூறுக்கு என்ன பண்ணப் போகிறோம்?!' என்கிற கவலை அவருக்கு.

திடீரென்று ஒரு கருணைக் குரல்:''சந்தானம்! கிட்ட வாயேன் ஏன், அங்கேயே நின்னுண் டிருக்கே?'' – சிரித்தபடி ஜாடை காண்பித்து, அருகில் அழைத்தார் ஆச்சார்யாள். இருவரும் சென்று, சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து எழுந்தோம்.

''என்ன சந்தானம் நேத்திக்கு நீ கண்ணுல படவே இல்லியே! ஊர்ல ஏதாவது வைதீக ஜோலியோ?'' என்று வினவினார் ஸ்வாமிகள்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லே பெரியவா. ஞாயித்துக் கிழமை எங்க ஊர் சார்பா பிக்ஷா வந்தனம் பண்றமோல்லியோஞ் அது விஷயமா ஏற்பாடுகள் பண்ணிண்டிருந்தேன். அதனால தான்'' என்று என் தகப்பனார்

முடிப்பதற்குள் இடைமறித்த ஸ்வாமிகள், ''அது சரி சந்தானம் லௌகிகமெல்லாம் (வசூல்) எதிர்பார்த்தபடி பூர்த்தி ஆச்சோல்லியோ?!'' என சிரித்தபடியே வினவினார். இதற்கு பதில் சொல்லத் தயங்கினார் என் தகப்பனார்.

அவர் ஏதோ சொல்ல வாயெடுப்பதற்குள் ஸ்வாமிகள் எதையோ புரிந்து கொண்டவர் போல, ''ஒண்ணும் கவலைப்படாதே! சந்திரமௌலீஸ்வரர் கிருபையால எல்லாம் நீ நெனைச்சுண்டு இருக்கறபடியே நடக்கும்!'' என வார்த்தைகளால் வருடிக் கொடுத்தார்.

திடீரென, ''ஏன் சந்தானம் இந்த ஊர் காவிரி நதியிலே இப்போ நெறய ஜலம் போறதோ தெரியுமோ ஒனக்கு?'' என்று கேட்டார். 'காவிரி ஜலத்தைப் பற்றி பெரியவா ஏன் விசாரிக்கிறார்?' என்று அனைவரும் குழம்பினர்.

''போயிண்டிருக்கு பெரியவா'' என்றார் தகப்பனார். பெரியவா விடவில்லை: ''அது சரி! நீ எப்ப காவிரி ஸ்நானத்துக்குப் போயிருந்தே?''

''ஒரு வாரம் முன்னாடி பெரியவா!'' என் தகப்பனார் பதில் சொன்னார்.

''அதிருக்கட்டும் இப்ப ஜலம் போயிண் டிருக்கோ தெரியுமோ?'' – இது பெரியவா.

உடனே அருகிலிருந்த உள்ளூர் அன்பர் ஒருவர் பவ்வியமாக, ''இன்னிக்குக் காத்தால நான் காவிரி ஸ்நானத்துக்குப் போயிருந்தேன். சுமாரா ஜலம் போறது பெரியவா'' என்றார்.

ஸ்வாமிகளுக்கு சமாதானம் ஏற்படவில்லை. ''சுமாரா போறதுன்னா புரியலியே! அமிழ்ந்து ஸ்நானம் பண்றாப்ல போறதா, இல்லியானு எனக்குத் தெரியணும்'' என்றவர், என் தகப் பனாரைப் பார்த்து, ''சந்தானம், நீ ஒரு காரியம் பண்ணு. நாளக்கி விடியக் காலம்பற காவிரி ஸ்நானத்துக்குப் போ. நன்னா முழுகி ஸ்நானம் பண்றாப்ல தீர்த்தம் போறதானு பாத்துண்டு வந்து சொல்லு!'' என்று கூறிவிட்டு, 'விசுக்'கென்று எழுந்து உள்ளே சென்று விட்டார்!

'தான் காவிரியில் ஸ்நானம் பண்ணிவிட்டு வருவதற் காகத்தான், இவ்வளவு விவரங் களையும் பெரியவா கேட்கிறார் போலும்' என்று எண்ணியபடியே ஊர் திரும்பினோம்.

சனிக்கிழமை! பொழுது விடிந்தது. மழை லேசாகத் தூறிக் கொண்டிருந்தது. பெரியவா ஆக்ஞைப்படி காவிரி ஸ்நானத்துக்குப் புறப்பட் டோம். அப்போது காலை ஏழு மணி. கரையில் என்னையும் தகப்பனாரையும் தவிர ஒரு ஈ, காக்கா கூட இல்லை. என் தகப்பனார் ஸ்நானம் பண்ணியபடியே சொன்னார்: ''நன்னா முழுகி ஸ்நானம் பண்றாப்லதான் ஜலம் போறது! பெரியவாகிட்ட போய் சொல்லணும்.'' தொடர்ந்து, உரத்தக் குரலில் காவிரி ஸ்நான சங்கல்பம் சொல்ல ஆரம்பித்தார் என் தந்தையார்.

திடீரென கரையிலிருந்து, ''சாஸ்திரிகளே! கொஞ்சம் இருங்கோ. நானும் வந்துடறேன். எனக்கும் கொஞ்சம் ஸ்நான சங்கல்பம் பண்ணி வையுங்கோ புண்ணியமுண்டு!'' என்றொரு கணீர்க் குரல் கேட்டது.

இருவரும் திரும்பிப் பார்த்தோம். சுமார் 55 வயது மதிக்கத் தக்க ஒருவர், ஜலத்தில் இறங்கிக் கொண்டிருந்தார். முன்பின் பார்த் திராத முகம்! சங்கல்ப ஸ்நானம் முடிந்து கரையேறினோம். உடை மாற்றிக் கொண்ட அந்த நபர், தகப்பனா ருக்கு ஸ்நான சங்கல்ப தட்சணையாக ஐந்து ரூபாய் கொடுத்தார். அவரைப் பற்றி என் தகப்பனார் விசாரித்தார்.

அவர் சொல்ல ஆரம்பித்தார்: ''எனக்கும் பூர்வீகம் மருத்துவக்குடிதான். என் அம்மா வழித் தாத்தாவும் இந்த ஊர்தான். அப்பா வழி தாத்தா வெங்கடாசலம் ஐயருக்கு மருத்துவக்குடியிலே சொந்த வீடு இருந்தது.

எங்க தாத்தாவுக்கு அப்புறம் இங்கே ஒருத்தரும் இல்லே. பம்பாய் போயிட்டோம். திருநீலக்குடிக்கு அருகில் இருக்கிற மேலூர் சந்திரமௌலீஸ்வர ஸ்வாமிதான் எங்க குலதெய் வம். 'நீ எப்ப நம்மூர் பக்கம் போனாலும் ஆடு துறை காவிரியில ஸ்நானம் பண்ணிட்டு வா'னு எங்கம்மா அடிக்கடி சொல்லுவா. அந்த பாக்கியம் இன்னிக்குக் கிடைச்சுது.

குடும்ப கேஸ் விஷயமா தஞ்சாவூர் போயிண்டிருக்கேன். இப்போ சங்கல்பத்தோடு காவிரி ஸ்நானம் கிடைச்சுதுல ரொம்ப திருப்தி!'' என்றவர், ''ஆமா சாஸ்திரிகளே! ரயிலை விட்டு எறங்கி வர்றச்சே பார்த்தேன். நிறையப் பேர் மடிசாரும் பஞ்சகச்சமுமா போயிண்டிருக்காளே இங்கே என்ன விசேஷம்?'' என்று கேட்டார்.

ஆச்சார்யாள் விஜயம் பற்றியும், கிராம பிக்ஷா வந்தனம் பற்றியும் தகப்பனார் அவரிடம் விவரித் தார். அவருக்கு பரம சந்தோஷம்.

''கேக்கவே சந்தோஷமா இருக்கு. நம்மூர் சார்பா லோக குருவுக்கு நடக்கிற பிக்ஷா வந்தனத்துல என்னால கலந்துக்க முடியாத நிர்ப்பந்தம். இருந்தாலும் எங்க குடும்ப காணிக்கையா பிக்ஷா வந்தனத்துல இதையும் சேர்த்துக் கோங்கோ'' என்ற படி என் தகப்பனாரை நமஸ்கரித்து, அவரது கையில் ஒரு கவரைக் கொடுத்தார். தகப்பனாருக்கு ஒன்றும் புரியவில்லை. கவரைப் பிரித்துப் பார்த்தார். அதில் 500 ரூபாய்!

''நான் போயிட்டு வரேன் சாஸ்திரிகளே'' என்று கிளம்பியவரைத் தடுத்து நிறுத்திய என் தகப்பனார், ''ஒங்க நாமதேயம் (பெயர்)?'' என்று கேட்டார்.

அவர் சொன்ன பதில்: ''சந்திரமௌலீ!''

இருவரும் பிரமித்து நின்றோம்.

பின்னர், நேராக சத்திரத்துக்குச் சென்றோம். அங்கே பெரியவா இல்லை. கோவிந்தபுரம் போதேந்திராள் மடத்துக்குச் சென்றிருப்பதாகச் சொன்னார்கள்.

என் தகப்பனார் மடத்துக் காரியஸ்தரிடம் சென்று, ''பெரியவா, காவிரியில் அமிழ்ந்து ஸ்நானம் பண்றாப்ல, ஜலம் போறதானு பாத்துண்டு வரச் சொன்னா'' என்று முடிப்பதற்குள் அவர், ''பெரியவா விடியகாலம் நாலரை மணிக்கே காவேரில ஸ்நானம் பண்ணிட்டு வந்துட்டாளே'' என முத்தாய்ப்பு வைத்தார். எங்களின் பிரமிப்பு அதிகரித்தது!

ஞாயிற்றுக்கிழமை. பிக்ஷாவந்தனம் முடிந்தது. கிராமத்தைச் சேர்ந்த அனைவரும் பெரியவாளை நமஸ்கரித்தோம். தகப்பனார், பழத் தட்டில் பாத காணிக்கையாக அந்த 500 ரூபாயை வைத்து சமர்ப்பித்தார்.

பழத் தட்டையே சற்று நேரம் உற்றுப் பார்த்த ஸ்வாமிகள் சிரித்துக் கொண்டே, ''என்ன சந்தானம்! சந்திரமௌலீஸ்வரர் கிருபையால உன் மன விருப்பம் பூர்த்தி ஆயிடுத்தோல்லியோ? காவிரி ஸ்நான பலனும் கெடச்சுடுத்தோல்லியோ'' என்று வினவ, வியப்புடன் நின்ற அனைவரும் சாஷ்டாங்கமாக பெரியவா முன்னே விழுந்தோம்.

Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.N.Raja, Cell: 08825844033.
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

# PAPERLESS BOOK

## இயற்கைக்கு நண்பனாக விளங்கும்




## ஆன்மிகமலர்
### மெயில் புக்

இரண்டு விஷயங்களில் முதல் இடத்தில் உள்ளது.

1. இயற்கை பாதுகாப்பு,
2. ஆன்மிக செய்திகளை

இன்றைய தலைமுறை எளிமையாக புரியவைப்பது

இந்த சேவை தொடர வாழ்த்துக்கள்



- SATHYAAPRIYA

SERANGOON ROAD, SINGAPORE-208282

GET IT ON Google Play

கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து

**Aanmeega malar (mobile app)**

டவுண்லோடுசெய்து, செல்போனிலேயே

நமது இதழ் முழுவதும் படிக்கலாம்.

ஆன்மிகமலர் .காம்